வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 07.04.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 119 | பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


# தந்திரமாக பதவி விலக்கப்பட்டார் மகிந்த பின்னணியில் பெரும்சதி என்கிறார் நாமல்!

கொழும்பு, ஏப். 07

"கோட்டாபய பதவி விலகும்போது பிரதமராக இருந்த மகிந்த அடுத்தபடியாக ஜனாதிபதி ஆவார் என்பதில் அவர்கள் (போராட்டக்காரர்கள்) தெளிவாக இருந்தனர். அதனால்தான், அவர்கள் தந்திரமாக முதலில் மகிந்த ராஜபக்ஷவை பதவி விலக்கினார்கள். எனவே, அடுத்த பிரதமர் ஜனாதிபதியாக பதவி ஏற்பார் என்பதால்" - என்று கூறியிருக்கிறார் நாமல் ராஜபக்ஷ. 15



## நாமலின் கருத்துக்கு பெரமுவினர் ஆதரவு

கொழும்பு, ஏப். 07

நாமல் ராஜபக்ஷ எம். பி. கூறியது போன்று நாட்டில் பெரும் சதி இடம்பெற்றுள்ளதாக சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ, மகிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட 15

## இந்து மதத்தின் இருப்புக்கு இலங்கையில் பேராபத்து!

### தடுக்கக் கோரி இந்திய பிரதமருக்கு ஏழு புலம்பெயர் அமைப்புகள் கடிதம்!

புதுடில்லி, ஏப்ரல் 07

இலங்கையில் இந்து பாரம்பரியத்தின் இருப்புக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாக புலம்பெயர் அமைப்புகள் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளன. ஏழு புலம்பெயர் அமைப்புகள் இணைந்து இந்தக் கடிதத்தை எழுதியுள்ளன.

அந்தக் கடிதத்தில், "இலங்கை அரசாங்கம் தனது இராணுவத்தின் உதவியுடன் வடக்கு, கிழக்கில் இந்து கலாசாரம் - பாரம்பரியம் - கோவில் ஆகிய வற்றின் இறுதிக் கோட்டையை 15

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் குழு ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கும்!

### கட்சி முடிவு எடுக்க தவறினால் என்கிறார் ராஜித அமைச்சு பதவியை ஏற்கவும் தாம் தயாராம்



கொழும்பு, ஏப். 07

ஐக்கிய மக்கள் சக்தியின் ஹர்ஷ டீ சில்வா உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தயாராகவுள்ளனர் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம் ஒன்றை எடுக்காது விட்டால் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று ஜனாதிபதியை ஆதரிக்கும் என்று கூறிய அவர், அரசியல் காரணங்களுக்காக அமைச்சு ஒன்றை 15

## திருமலையில் மற்றோர் ஆலயமும் பௌத்த ஆக்கிரமிப்பின் பிடியில்!

### மூதூர் மலையடி பிள்ளையார் ஆலய காணியில் படைகளின் பிரசன்னத்துடன் விகாரை நிர்மாணம்

திருகோணமலை, ஏப். 07

இராணுவம் - கடற்படை உதவியுடன் ஆக்கிரமிக்கப்பட்ட திருகோணமலை- மூதூர் மலையடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை அமைக்கும் பணி நிறைவை எட்டியுள்ளது.

இந்த நிலையில் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பௌத்த விகாரையின் தேவைக்காக தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான 15



## மின்சாரம் தாக்கி மாணவன் மரணம்!

யாழ்ப்பாணம்,ஏப். 07

மின்சாரம் தாக்கி உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

கொக்குவில் குளப்பிட்டியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்தச் சம்ப வத்தில் மோகனதாஸ் கிஷோத்மன் (வயது 17) என்பவரே உயிரி ழந்தார்.

தனது வீட்டில் மின் அழுத்தியை மின் இணைப்புடன் பொருத்த முற்பட்ட 15

## யாழ். போதனா மருத்துவமனை விடுதிகளும் மூடப்பட நேரலாம்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 07

அநுராதபுர போதனா மருத்துவமனையில் குழந்தை நல பிரிவுகள் மூடப்பட்டமை போன்ற நிலைமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் ஏற்படலாம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வட மாகாண ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் த. மயூரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் நான்கு குழந்தைகள் நல பிரிவுகள் இருந்தன. இதில் இரு பிரிவுகள் மருத்துவர்கள் இன்மையால் அண்மையில் மூடப்பட்டன. இதனால், பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. சிகிச்சை பெறுபவர்களுக்கு மட் டும் இதனால் பாதிப்பு 15

## தமிழ் - சிங்கள மீனவர் திருமலையில் மோதல்!

திருகோணமலை, ஏப். 07

திருகோணமலையின் திருக்கடலூர், அதன் அயலிலுள்ள விஜிதபுர கிராமங்களை சேர்ந்த தமிழ், சிங்கள மீனவர்கள் நேற்று மோதலில் ஈடுபட்டனர். இதில் காயமடைந்த 6 மீனவர்கள் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் மோதலை தடுப்பதற்கு அந்தப் பகுதிக்கு இராணுவத்தை வரவழைக்க நேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ் மீனவர்கள் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டனர். 15

## சமுர்த்தி கொடுப்பனவை அதிகரித்து தருவதாகக்கூறி யாழில் பணம்பறிப்பு!

யாழ்ப்பாணம்,ஏப். 07

சமுர்த்தி உதவிக் கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் இரட்டிப்பாக அதிகரித்து வழங்குவதாக தெரிவித்து தனிமையில் இருந்த சிறப்புத் தேவையுடைய வயோதிப பெண்ணிடம் இனந் தெரியாத ஒருவரால் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி வளலாயில் நேற்று வியாழக் கிழமை மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த நபர், கோப்பாய் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர் என தன்னை அறிமுகப்படுத்தியு ள்ளார். தனிமையில் வசிக்கும் அந்தப் பெண தையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளார்.

தங்களுக்கு தற்போது வழங்கப்படும் சமுர்த்தி உதவித் தொகையை அடுத்து வரும் 15

## யாழ்ப்பாணத்தில் பாணின் விலை ரூ. 10 குறைகிறது

யாழ்ப்பாணம், ஏப். 07

யாழ்ப்பாணத்தில் இன்று முதல் ஒரு இறாத்தல் பாணின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், இன்று முதல் ஒரு இறாத்தல் பாணின் விலை 160 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமையல் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## தமிழ்...

இதற்கு சிங்கள மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதன்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலில் முடிந்தது. இதன்போது இரு தரப்பினரும் கற்களை வீசியும் கொட்டன்களாலும தாக்கிக் கொண்டனர். இதில், இரு தரப்பிலும் தலா மூவர் வீதம் 6 பேர் காயமடைந்தனர். எனினும், பாரதூரமான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பொலிஸார் இரு கிராமத்தவர்களையும் அழைத்து சமரசம் செய்து வைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யாழ்...

ஏற்படவில்லை. மருத்துவபீட மாணவர்களின் கல்விக்கும் இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், யாழ். போதனா மருத்துவமனையில் நான்கு குழந்தைகள் நல பிரிவுகள் உள்ளன. இங்கும் மருத்துவபீட மாணவர்கள் கற்கிறார்கள். தற்போது வரை இங்கு அவ்வாறான பிரச்னை இல்லை. எனினும், எதிர்காலத்தில் ஏற்படலாம். இது நோயாளர்களுக்கு மட்டும் சிக்கலாக இருக்காது. மருத்துவத் துறைக்கும் பெரும் பாதிப்பாக இருக்கும்.

இருந்தாலும், வடக்கு மாகாணத்தில் மாவட்ட பொது மருத்துவமனைகள், ஆதார மருத்துவமனைகளும் உள்ளன. இவற்றில் சில மருத்துவமனைகளில் குழந்தைகள் நல மருத்துவ நிபுணர்கள் இல்லை. சில மருத்துவமனைகளில் ஒருவரே கடமையில் இருக்கிறார். குறைந்தது ஒரு மருத்துவமனைக்கு இரு மருத்துவர்கள் தேவைப்படும் நிலையிலேயே ஒருவர் மட்டும் சேவையில் இருக்கிறார். இதனால், நோயாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

அரசாங்கம் மருத்துவர்களின் வெளியேற்றத்தை நிறுத்த வேண்டும். அதற்கு நாம் அவர்களுக்கு வழங்கியுள்ள திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## தந்திரமாக...

அத்துடன், ராஜபக்ஷக்களை அதிகாரத்திலிருந்து நீக்குவது மூன்றாம் தரப்பின் சதிச் செயல். போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு நபரும் மூன்றாம் தரப்பு சதியாளர்களின் கைக்கூலிகள். இதைப் பற்றி மக்கள் பின்னர் விளங்கிக் கொள்வார்கள்", என்றும் அவர் கூறியுள்ளார்.

சமூகவலைத்தளம் மூலமான உரையாடல் ஒன்றிலேயே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "இப்போதும் எங்களுக்கு போராட்டத்தைப் பற்றி எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பிரச்னை உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் மூன்றாம் தரப்பின் ஆட்கள் என்பதை நாம் மனதில் கொள்ளளவேண்டும். போராட்ட காலத்தில் நீங்கள் மூன்றாம் தரப்பின் கைக்கூலியாக இருந்தீர்கள் என்பதை நீங்கள் பின்பு புரிந்து கொள்வீர்கள்"

'கோட்டா கோ ஹோம்' என்று நீங்கள் கூறும்போது ஜனாதிபதி பதவிக்காக பிரதமர் வரிசையில் நிற்கிறார். அதனால்தான் கோட்டாபய பதவி விலகும் முன்னர் மகிந்த பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை தோன்றியது. போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் கட்சி சார்பற்றவர்கள் இல்லை.

கோட்டாபய பதவி விலகும்போது பிரதமராக இருந்த மகிந்த அடுத்தபடியாக ஜனாதிபதி ஆவார் என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தனர். அதனால்தான் அவர்கள் தந்திரமாக முதலில் மகிந்த ராஜபக்ஷவை பதவி விலக்கினார்கள். எனவே, அடுத்த பிரதமர் ஜனாதிபதியாக பதவி ஏற்பார் என்பதால்" என்றார். (ஐ)

## நாமலின்...

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

முகநூல் ஊடான உரையாடல் ஒன்றில் பங்கேற்ற நாமல் ராஜபக்ஷ,

"அறகலய"வில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் மூன்றாம் தரப்பு சதியாளர்களின் கைக்கூலிகள் இதனை மக்கள் பின்னர் புரிந்து கொள்வார்கள். கோட்டாபய பதவி விலகும்போது பிரதமராக இருந்த மகிந்த அடுத்தபடியாக ஜனாதிபதி ஆவார் என்பதில் அவர்கள் (போராட்டக்காரர்கள்) தெளிவாக இருந்தனர். அதனால்தான், அவர்கள் தந்திரமாக முதலில் மகிந்த ராஜபக்ஷவை பதவி விலக்கினார்கள். எனவே, அடுத்த பிரதமர் ஜனாதிபதியாக பதவி ஏற்பார் என்பதால்...", என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்து மதத்தின்...

இலக்குவைக்கிறது.

1948ஆம் ஆண்டின் பின்னர் 1,800 ஆலயங்களையும் பாரம்பரியங்களையும் அழித்த பின்னர் இது இடம்பெறுகின்றது. இலங்கையின் வட பகுதியில் அதிகளவு மதிப்புக்குரியதாகக் காணப்படும் கீரிமலை பகுதியில் காணப்பட்ட ஐந்து நூற்றாண்டு கால வரலாற்றை கொண்டுள்ள ஆதிசிவன் ஆலயம் இராணுவ ஆக்கிரமிப்பு என்ற போர் வையில் அழிக்கப்பட்டுள்ளதை ஆழ்ந்த கரிசனையுடனும் அவசரத்துடனும் நாங்கள் உங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது இராணுவம் அந்தப் பகுதியை மிக நீண்டகாலம் தனது கட்டுப் பாட்டின் கீழ் வைத்திருந்த பின்னர், பொது மக்களை அங்கு செல்ல அனுமதித்த வேளையே இது தெரியவந்தது. கோவிலையும், துறவிகளின் சமாதி யையும் அழித்துவிட்டு அது இருந்த இடத்தில் ஜனாதிபதி மாளிகையை கட்டியுள்ளனர்.

இதன் மூலம் இந்துக்கள் இறந்தவர்களுக்கு வழங்கும் இறுதி மரியாதையின் புனிதத்தை சீர்குலைத்துள்ளனர்.

2015இல் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்த பகுதிக்கு அருகில் உள்ள நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இலங்கையில் உள்ள இந்து பாரம்பரியம், கலாசாரத்தின் இறுதிச் சின்னமாக காணப்படுபவற்றை அழிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இலங்கை அரசாங்கம் செயல்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தை பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்தியாவும் சர்வதேச சமூகமும் பிணையெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளபோதிலும் இது இடம்பெறுகின்றது.

புனித பொருள்களை அவமதிக்கும் இந்த செயல் இடம்பெற்ற சில காலத்துக்குள் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் உள்ள இந்துக்களின் புனித பகுதியான கன்னியா வெந்நீரூற்றை அநுராதபுர நகரத்துடன் தொடர்புடையது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. அதனை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் உள்ள ஆதி சிவன் ஐயனார் கோவில் அழிக்கப்பட்டுள்ளது. வவுனியா வெடுக்குநாறிமலையில் உள்ள ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டன - களவாடப்பட்டன.

இலங்கைக்கான சர்வதேச உதவிகளை நாங்கள் வரவேற்கும் அதேவேளை, இலங்கையில் இந்து பாரம் பரியம் - கலாசாரம் ஆகியவற்றை அழிக்கும் தனது நிகழ்ச்சி நிரலுக்கு இலங்கை அரசாங்கம் இந்த உதவியை பயன்படுத்த நிதி வழங்கும் சமூகம் அனுமதிக்கக்கூடாது என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்து மத கலாசாரம் அழிக்கப்படுவதை தடுப்பதற்காக இலங்கையின் வட, கிழக்கு பகுதிகளில் சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையை அமைக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை நிதி வழங்கும் சமூகம் வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# தேசிய இன அந்தஸ்து கோரி மலையக தமிழர் போராட்டம்

கொழும்பு, ஏப். 06

200 வருடங்களாக வாழ்ந்து வந்து வரும் மலையக மக்களை தேசிய இனமாக அங்கீகரித்து அவர்களுக்கு நில உரிமையை வழங்குமாறு கோரி நேற்று கொழும்பில் போராட்டம் இடம்பெற்றது.

கொழும்பு ஐந்துலாம்பு சந்தியில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் மலையக தமிழர்களுடன் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் போராட்டக்காரர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## மின்சாரம்...

வேளையே அவர் மின்சார தாக்குதலுக்கு இலக்கானார்.

உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று அறியவருகின்றது.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும் வெதுப்பக பொருட்களின் விலைகள் குறைக்கப்படாது என்று அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்திருந்தது. இந்த நிலையிலேயே கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் பாணின் விலையை 10 ரூபாயால் குறைத்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் க. குணரத்தினம் தெரிவித்தார். (ஐ-03)

## திருமலையில்...

காணிகளும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை - மட்டக் களப்பு நெடுஞ்சாலையில் 64ஆம் கட்டையிலுள்ள மலையடி பிள்ளையார் ஆலயம் அந்த வீதியால் பயணிக்கும் மக்களின் வழிபாட்டுத் தலமாகும். இந்த ஆலயப் பகுதிக்கு கடந்த 2021 டிசெம்பர் மாதம் பிக்கு கள் குழு ஒன்று இரவு வேளை சென்றி ருந்தது. அங்கு புத்தர் சிலை ஒன்றை அவர்கள் வைத்துச் சென்றனர்.

மறுநாள் காலை இதை அவதா னித்த அப்பகுதி மக்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். இதையடுத்து, பொலிஸாரின் தலையீட்டில் அங்கிருந்து புத்தர் சிலை அகற்றப்பட்டது.

எனினும், சில நாட்களின் பின் னர் - மக்களின் கடும் எதிர்ப்பு களுக்கு மத்தியில் ஆலயத்தை அண் மித்து - ஆலய வளாகத்திலேயே மீண்டும் புத்தர் சிலை ஒன்று நிறு வப்பட்டது. இதைத் தொடர்ந்து மலைப்பகுதியில் "கெட்டியாராமை சிறீ பத்ர தாது ரஜ மகா விகாரை" க்கான நிர்மாணப் பணிகள் நடை பெற்றன.

இராணுவமும் கடற்படையும் இணைந்து இரவு - பகலாக இந்த விகாரையின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலை யில் இந்த விகாரையின் நிர்மாணப் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ளது.

திருகோணமலையில் ஏற்கனவே இந்துக்களின் முக்கியத்துவம் பெற்ற கன்னியா வெந்நீரூற்று முழுமையாக பௌத்த மயமாக் கப்பட்டது. ஏற்கனவே, தமிழர் தாயகத்தின் முல்லைத்தீவு - குருந்தூர்மலை, வவுனியா - வெடுக்குநாறி மலை என இந்து ஆலயங்கள் பல பௌத்த மயமாக்கப்பட்டு வருகின் றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐக்கிய..

இலக்கு வைக்க ஏற்றுக்கொள்வார் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், யார் என்ன சொன்னாலும் ஹர்ஷ டீ சில்வா போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பார்கள். தீர்க்கமான முடிவை எடுக்காவிட்டால் நாங்கள் குழுவாக பணியாற்றுவோம். பலர் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற விரும்புகின்றனர். ஆனால், தேர்தலில் அவருக்கு எதிராக செயல்பட்டதால் தயக்கம் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையே கொள்கை வேறுபாடுகள் இல்லை. தவிர, கொள்கை வேறுபாடுகள் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் தனித்து செல்லவில்லை மாறாக, ரணில் விக்கிரமசிங்கவின் முடிவெடுக்கும் பாணியில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவே பிரிந்து சென்றனர்.

ஜனாதிபதி நாட்டை முன்னரை விட சிறந்த நிலைக்கு கொண்டு சென்றுள்ளார் என்ற கருத்து யதார்த்தபூர்வமானது - என்றும் கூறினார்.

"சுகாதார அமைச்சை ஏற்றுக்கொள்ள தயாகராக இருக்கிறீர்களா", என்று இதன்போது செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அரசியல் காரணங்களுக்காக அமைச்சு ஒன்றை ஏற்றுக்கொள்வதாகவும் சுகாதார துறையை மேம்படுத்துவதை குறுக்கு வழியலான ஓர் அளவு கோலாகக் கருதப்போவதில்லை. சுகாதாரதுறை நெருக்கடி குறித்து ஜனாதி பதியுடன் கலந்துரையாடியுள்ளேன். அதை சரி செய்ய என்ன செய்ய வேண்டுமோ அதை செய்வதாக உறுதியளித்துள்ளார் - என்றும் கூறினார்.

## சமுர்த்தி...

மாதங்களில் அரசாங்கத்தால் இரட்டிப்பாக வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காக தாம் ஒவ்வொரு சமுர்த்திப் பயனாளிகளிடமிருந்தும் 20 ஆயிரம் ரூபாய் பணத்தை அறவிடுகிறோம் என்று தெரிவித்த அந்த நபர் நான்கு படிவங்களைக் கொடுத்து அதில் கையொப்பமிட்டு வழங்குமாறு கூறியுள்ளார்.

தன்னிடம் தற்போது அவ்வளவு தொகை பணம் இல்லை அயலிலுள்ளவர்களிடம் பெற்றுத்தான் வழங்க வேண்டும் என்று வயதான பெண் தெரிவித்துள்ளார். பணம் உடனடியாக வழங்காவிட்டால் எதிர்வரும் மாதங்களில் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்த அந்த நபர் வலுக்கட்டாயமாக பணத்தைப் பெற்றுள்ளார்.

"வந்திருப்பவர் முகக்கவசத்தை அணிந்தவாறு உடனடியாக பணத்தை வழங்க வேண்டும் என்று கடுந்தொனியில் தெரிவித்ததார். அதனால் எனக்கு இது மோசடி என சந்தேகம் ஏற்பட்டது. எனினும் பணத்தை வழங்காவிட்டால் எனது உயிருக்கு ஏதேனும் விபரீதம் நிகழலாம் என்ற அச்சம் ஏற்பட்டது. பணத்தை வழங்கிவிட்டு அலைபேசி ஊடாக அயலவர்களுக்கு தெரிவிக்க லாம் என்று முயற்சித்தபோது எனது அலைபேசியும் களவாடப்பட்டுள்ளமை தெரியவந்தது" என்று பாதிக்கப்பட்ட பெண் பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதேவேளை, கடந்த வாரம் நீர்வேலி பகுதியிலும் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பிரதேச செயலகத்திலிருந்து பதிவுகளை மேற்கொள்ள வருவதாக தெரிவித்து பல பண மோசடிகள் இடம் பெற்றுள்ளன. எனவே இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறு அதிகாரிகள் கேட்டுள்ளனர். (ஐ-03)

## இப்படியும் நடக்கிறது...!

ஒருவர் புதிதாக மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு வந்தார். எதிரே வந்த ஒருவரைப் பார்த்து ‘மணியண்ணே, எனக்கு எப்படி கண்ணாடி வடிவாக இருக்கின்றதா,’ என்று கேட்டார்.

அதற்கு எதிரே வந்தவர் சொன்னார், ‘உங்களுக்கு கண்ணாடி வடிவாகத்தான் இருக்குது. ஆனால், நான் மணியண்ணே இல்லை’ என்று.

அவருக்கு கண்ணாடி போட்டபின்னர் எதிரே வருபவர்களையே அடையாளம் தெரியாத அளவுக்கு பிழையான கண்ணாடியைக் கொடுத்துவிட்டார்கள் போலும்.

சில வாரங்களுக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் பரபரப்பாக பேசப்பட்ட விடயம் யாழ்ப்பாணத்தில் வீதியின் நடுவில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலை பற்றியதே. திருவள்ளுவர் திருநீற்றுக் குறியுடன் காட்சி தருகின்ற அந்தச் சிலை பற்றிய விமர்சனங்கள் ஓய்வதற்கு முன்னதாகவே ஆனையிறவில் நடராஜருக்கு சிலை வைக்கப்பட்டது.

இந்த சிலைகள் பற்றி அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தனது கட்டுரை ஒன்றில் பின்வருமாறு எழுதியிருந்தார்.

‘பொதுவெளிச் சிற்பங்கள் அவற்றை நிறுவும் நிறுவனங்கள் அல்லது தனி நபர்களின் விருப்பங்களை மட்டும் பிரதிபலிப்பவை அல்ல. அதைவிட ஆழமான பொருளில் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் கலை மேதமையை, அழகியல் உச்சங்களை, அரசியல் கலாசார பல்வகைமையை வெளிக்காட்டுபவைகளாக அமைய வேண்டும். ஒரு வெளிப்பார்வையாளர் கண்டு வியக்கும் அளவுக்கு அது ஒரு வெற்றி பெற்ற கலைப் படைப்பாக அமைய வேண்டும்.’

அதாவது பொதுவெளியில் நிறுவப்படும் ஒரு சிலை வெறுமனே ஓர் அடையாளம் மாத்திரமல்ல, அது எங்கே வைக்கப்பட்டிருக்கின்றதோ அந்த மக்களின் மேதமையை அழகியல் உச்சத்தை பிரதிபலிக்கவேண்டும் என்ற அவரின் கருத்து கவனிக்கப்பட வேண்டியதே.

ஆனையிறவு நடராஜர் சிலையை நடராஜரின் முகத்தை உற்று நோக்கினால், இதுகாலவரை நாம் பார்த்த நடராஜரை அதில் காணமுடியவில்லை. சில வேளை சிலையைச் செய்வித்தவர்கள் தங்களுக்கு வேண்டிய தலைவர் யாராவது ஒருவருடைய படத்தை கொடுத்து நடராஜர் சிலையை வடிக்க சொன்னார்களோ தெரியவில்லை.

அதுவல்ல, நாம் இந்தப் பத்தியில் சொல்ல வருவது.

நேற்று முன்தினம் வவுனியா நகரில் ஒரு சிலை நிறுவப்பட்டது. அந்தச் சிலை யாருடையது என்பதை அறிந்துகொள்ள அந்தச் சிலையின் கீழ் எழுதப்பட்டிருந்த பெயர் பலகையை பாத்தபோது, அந்தத் தலைவரை அதற்கு மேலும் யாரும் கேவலப்படுத்தியிருக்க மாட்டர்கள் என்றே எண்ணத் தோன்றியது.

தன்வாழ்நாள் முழுவதும் மிகச் சாதாரணமான ஒருவராக வாழ்ந்து மறைந்தவர் அவர். ஒரு பெரும் இயக்கத்தை கட்டியெழுப்பி - அந்த இயக்கத்தை வழிநடத்தியபோதிலும் அவர் வாழ்ந்தது ஒரு மிகச் சாதாரணனின் வாழ்க்கையை.

அவரின் சிந்தனைகள் போலவே அவரின் உடலும் மிக உயர்ந்தது. அவரை அறிந்த அல்லது அவரோடு கூடவே இயங்கிய அத்தனை தோழர்களுக்கும் அவரை நன்கு தெரியும்.

சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் சந்தித்த ஓர் இடதுசாரி தலைவர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, பத்மநாபா பற்றிய பேச்சு வந்தது.

அப்போது அந்த இடதுசாரி தலைவர் சொன்னார், ‘நான் என்னுடைய வாழ்நாளில் மூன்று தடவைகள் கண்ணீர்விட்டு அழுதிருக்கின்றேன். ஒரு தடவை எனது தந்தை இறந்தபோது, அதன் பின்னர் எனக்கு மிகவும் பிடித்த விரிவுரையளர் இறந்தபோது. மூன்றாவதாக நான் கண்ணீர்விட்டு அழுதது, பத்மநாபா மரணித்தபோது’ என்று.

அத்தகைய சிறப்புக்குரிய அந்தத் தலைவன், தனக்கு சிலை வைப்பதையே விரும்பியிருக்கமாட்டார். ஆனால் அதுகூட பரவாயில்லை, ஒருகுள்ளராக, அவரின் தோற்றத்துக்கும் அந்தச் சிலைக்கும் எந்தத் தொடர்புமே இல்லாமல் அப்படியொரு சிலையை ஏன் வைத்தார்கள் என்பது தெரியவில்லை.

சிலர் நவீன ஓவியம் என்று எதையாவது கீறிவிட்டு, அது என்ன என்று கீழே எழுதி வைப்பார்கள். அதுபோல ஒரு நவீன வடிவில் சிலையை செய்துவிட்டு கீழே பத்மநாபா ஞாபகார்த்தம் என்று போட்டிருந்தாலும் பரவாயில்லாமல் இருந்திருக்கும்.

**- ஊர்க்குருவி**

# எல்லை கிராமமான மணல்கேணியை மீட்டெடுப்பதற்கு தமிழ் மக்கள் முயற்சி!

## காணிகள் இருப்போரை தொடர்பு கொள்ளவும் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப். 07

பௌத்த - சிங்கள ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான முல்லைத்தீவின் மணலாறு - மணல்கேணிக் கிராமத்தை மீட்டெடுக்க 40 வருடங்களின் பின்னர் காணி உரிமையாளர்கள் சிலர் முயற்சி எடுத்துள்ளனர்.

மணல்கேணி பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இதைத் தொடர்ந்து, இதுவரையில் அப்பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை.

இந்த் நிலையில், இவ்வாறு மணல்கேணியில் காணியுள்ள, காணி உரிமையாளர்கள் ஐவர் நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு வருகைதந்து தமது காணிகளைத் துப்பரவுசெய்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி கோரியிருந்தனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த குறித்த காணி உரிமையாளர்கள், மணல்கேணியில் காணிஉள்ள ஏனைய காணி உரிமையாளர்களைத் தாம் தேடிவருவதாகவும் அவர்களும் தம்மோடு கைகோத்து எல்லைக்கிராமத்தை மீட்டெடுக்க முன்வரவேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், இந்த காணி உரிமையாளர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர். குறிப்பாக மத்திய வகுப்பு காணிகள் என்ற அடிப்படையில் 1000 ஏக்கர் திட்டத்தில் இந்தக் காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு வருகைதந்து அரச உத்தியோகத்தில் ஈடுபட்டவர்களுக்கே பெரும்பாலும் இந்தக் காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அவ்வாறு மணல்கேணிப் பகுதியில் காணிகள் பெற்றுக் கொண்டவர்கள் பெரும்பாலானர்கள் தற்போதும் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, அச்சுவேலி, கொழும்பு என பல இடங்களிலும் வசிக்கின்றனர்.

எனினும், அவர்களை இனங்கண்டு தொடர்புகளை ஏற்படுத்துவதில் பெரும் சிக்கல்கள் காணப்படுகின்றன. இவ்வாறு காணி உள்ளவர்களில் ஐவர் மாத்திரமே எமது காணிகளுக்கு உரிமை கோரி வந்திருக்கின்றோம்.

எனவே மணல்கேணியில் காணிகள் உள்ளவர்கள் எம்மோடு இணைந்துகொள்ளுங்கள், நாம் அனைவரும் இணைந்து எமது எல்லைக் கிராமத்தை மீட்டெடுக்க வேண்டும். எனவே, காணி உரிமையாளர்கள் 77 922 9098 என்னும் இந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இந்த மணற்கேணி காணி தொடர்பிலே பேசமுடியும்.

45வருடகாலத்துக்குப் பின்னர் நாம் எமது வளமான எல்லைக் கிராமத்தினை மீட்டெடுப்போம். அதற்காக நாம் அனைவரும் ஒன்று சேருவோம் - என்றனர். (ஐ)

# ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியானது

கொழும்பு, ஏப். 07

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபை சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஏற்பாடுகள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிகள், நியமங்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நேற்று வியாழக்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் விசேடமாக “இலஞ்சம் அல்லது ஊழலுக்கு எதிரான விடயங்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு“ என்ற பெயர் வடிவிலான சுயாதீன ஆணைக்குழு ஒன்றை நிறுவ பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தவிசாளர் உட்பட மூன்று உறுப்பினர்களை கொண்டதாக ஆணைக்குழுவின் அமைப்பு காணப்படும். சட்டம் - மருத்துவ கணக்காய்வு சட்டம் - மருத்துவக் கணக்கியல், பொருளியல், சர்வதேச தொடர்புகளும் இராஜதந்திர சேவைகள், பகிரங்க அலுவலக முகாமைத்துவம் அல்லது பொது முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஆகக் குறைந்தது 20 ஆண்டுகால சேவைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினர்களும் இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும், 62 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தலாகாது, உடல் ரீதியிலும், உளரீதியிலும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன் தகுதி வாய்ந்தவராகவும், நேர்மையானவராகவும், உயர் ஒழுக்கமுடையவராகவும், நன்மதிப்புள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் சம்பளம் பெறும் தொழில்களில் ஈடுபட்டிருப்பின் அவற்றை துறத்தல் வேண்டும். அத்துடன், ஆணைக்குழுவின் உறுப்பினராக பதவி வகிக்கும் போது சம்பளம் பெறும் சேவைகள், உயர் தொழில்கள் ஆகியவற்றை தொடரக்கூடாது.

ஆணைக்குழுவின் தலைவர், உறுப்பினராக பதவியேற்க முன்னர் அவர்கள் தங்களின் அனைத்து சொத்துகள் தொடர்பான ஆவணங்களையும் பொறுப்புக்களையும் அரசமைப்பு பேரவைக்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஆணைக்குழுவின் தவிசாளர் ஐந்தாண்டு காலத்திற்கும், ஏனைய உறுப்பினர்கள் நான்காண்டு காலத்திற்கும் பதவி வகிப்பார்கள். இவர்களின் சம்பளம் பாராளுமன்றத்தின் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்பட்டுள்ளது, பதவி காலத்தின் போது சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமே தவிர குறைக்கப்பட கூடாது.

ஆணைக்குழுவானது 158 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்திற்கு பொறுப்புள்ளதாகவும் பொறுப்பு கூற வேண்டியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 159 ஆவது உறுப்புரையின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டும் ஆணைக்குழுவின் செயலாற்றுகை தொடர்பான அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(1) பிரிவு 41 மற்றும் 65ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்குமான கூட்ட நடப்பெண் இரண்டு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் பொறுப்புக்களாக விதிகளை அழுத்திக் கூறுதல், வலியுறுத்தல் ஊடாக ஊழலை தடுத்தல் தொடர்பான கல்வி அல்லது பயிற்சியை உரிய தரப்பினருக்கு வழங்கல், ஊழல், அதற்கான காரணங்களும் அதன் பாரதூரத்தன்மை மற்றும் அதனால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்கள் என்பன தொடர்பாக பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்யல த் தடுத்தல், ஊழலுக்கு எதிரான போராட்டத்திலும் ஈடுபடல். ஆணைக்குழுவானது குடியியல் சமூகத்தினதும் அரச சார்பற்ற மற்றும் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்களினதும் முனைப்பான பங்குப்பற்றலை ஊக்குவித்தல் வேண்டும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
07.04.2023 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பத்மநாபாவுக்கு சிலை?

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் கந்தசாமி பத்மநாபாவுக்கு வவுனியாவில் உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. பத்மநாபா 1990 ஜூன் மாதம், தமிழ்நாட்டில் கொல்லப்பட்டார். காலம் விசித்திரமானதா அல்லது ஈழத் தமிழர்களின் அரசியல் விசித்திரமானதா? பத்மநாபா தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இந்தியாவின் பக்கமாக நின்று தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்னும் நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக இருந்த ஓர் ஆயுத விடுதலை இயக்கமாகும். இன்று மாகாண சபை முறைமை இருக்கின்றதென்றால் அதற்கு ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பே பிரதான காரணமாகும்.

உண்மையில், இந்தியாவின் முதல் தெரிவாக அன்று ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் இருந்திருக்கவில்லை. இந்தியாவின் முதல் தெரிவாக இருந்தது விடுதலைப் புலிகள் இயக்கமாகும். பிரபாகரன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன் பயணிக்க மறுத்ததைத் தொடர்ந்து இரண்டாவது தெரிவாக இருந்தது அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி. ஆனால், அமிர்தலிங்கமும் மாகாண சபை தேர்தலில் போட்டியிட பின்வாங்கியதைத் தொடர்ந்தே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்று 10 நாட்களுக்கு பின்னர் அமிர்தலிங்கம் தமிழ்நாட்டில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகின்றார். அதில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை மிகவும் உயர்வாகப் பேசுகின்றார்.

"இப்போதுதான் தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிகின்றது", என்று கூறுகின்றார். இவ்வாறு கூறிய அமிர்தலிங்கம் எதற்காக மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து பின்வாங்கினார். நிச்சயமாக அது கொள்கை சார்ந்த பிரச்னையில்லை. மாறாக அன்று பலமாகவும் - இந்தியாவுடன் முரண்பட்டுக் கொண்டுமிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பை - விரோதித்துக் கொள்ள அமிர்தலிங்கம் விரும்பவில்லை போலும். ஏனெனில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை வரவேற்ற - அதனைப் போற்றிய ஒருவர் மாகாண சபை தேர்தலை நிராகரிப்பதற்கான எந்தவோர் அவசியமுமில்லை.

1988 நவம்பர் மாதம் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்றது. 41 ஆசனங்களை பெற்று, ஈ. பி. ஆர். எல். எவ். ஆட்சியை கைப்பற்றியது. அண்ணாமலை வரதராஜப் பெருமாள் முதலமைச்சரானார். ஆரம்பத்திலிருந்தே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்து வந்த ரணசிங்க பிரேமதாஸ, 1989 ஜனவரியில் ஜனாதிபதியானதை தொடர்ந்து நிலைமைகள் சடுதியாக மாற்றமடைந்தன. விடுதலைப் புலிகள் - பிரேமதாஸ உடன்பாட்டை தொடர்ந்து இந்தியாவை ஈழத் தமிழர் அரசியலிலிருந்து அப்புறப்படுத்துவதில் பிரபாகரனும் பிரேமதாஸவும் இணைந்து செயல்பட்டனர். ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் மாகாண சபை நிர்வாகமும் முற்றுப்பெற்றது.

ஆனால், இன்று 35 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் 13ஆவது திருத்தச் சட்டத்தையாவது முழுமையாக அமுல்படுத்திவிட முடியாதா? - எப்படி அமுல்படுத்துவது - அதற்கு இந்தியாவின் உதவியை பெறுவதெப்படி என்னும் கேள்விகளுடன்தான் தமிழ் தலைமைகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இந்தியாவுடன் இணைந்து பயணிப்பதன் மூலம் தமிழ் மக்களின் நலன்களை வெற்றிகொள்ள முடியுமென்று அன்றே சிந்தித்த பத்மநாபா தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு தீர்க்கதரிசியாகவே தெரியக்கூடும்.

"ஏன் தோழர் இந்தியாவுடன் நிற்கின்றீர்கள்" - ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர்கள் சிலர் கேட்ட கேள்விக்கு அவர் கூறிய பதில் - இந்தியா என்பது ஒரு கருங்கற்பாறை - அதனுடன் தலையை முட்டினால் நமது தலைதான் உடையும். பாறையுடன் தலையை முட்டாமல் பயணிப்போமென்பது ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் அணுகுமுறையாக இருந்தது. வரலாற்றை பின்நோக்கி பார்த்தால் இந்தியாவை விரோதித்துக் கொண்டதே தமிழ்த் தேசிய அரசியலின் பிரதான தவறாக உணரப்படுகின்றது. இந்தத் தவறை அனைவருமே உணர்ந்திருப்பதாகவும் தெரிகின்றது. ஏனெனில், அனைவருமே இந்தியாவின் தயவுக்காகவே காத்திருக்கின்றனர். இந்தியா செய்யவில்லையென்று ஆதங்கப்படுகின்றனர். இந்தியா செய்யவில்லையே என்னும் ஆதங்கம் எங்கிருந்து வருகின்றது? இந்தியாவிடமிருந்து எதிர்பார்ப்பதால்தானே - ஆதங்கம் ஏற்படுகின்றது.

# புதிய சட்டத்தில் பயங்கரவாத வரைவிலக்கணம் ஆபத்தானது

## மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 07

அரசாங்கத்தின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் பயங்கரவாதத்துக்கு கொடுத்துள்ள வரைவிலக்கணத்தை அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும் என்று இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணம் நீண்டகாலமாகவே சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வந்துள்ளது. இந்த வரைவிலணக்கத்தின் பரந்துபட்ட நோக்கம் இந்த விடயத்தை சிக்கலாக்குகின்றது.

இந்த சட்டமூலத்தில் பயங்கரவாதத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் அபிப்பிராயபேதத்தை வெளிப்படுத்தும் நியாய பூர்வமான செயல்பாடுகளுக்கும் பயங்கரவாத செயல்பாடுகளுக்கும் இடையில் வித்தியாசம் காண்பதை கடினமானதாக்கியுள்ளது எனவும் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இணங்காதிருப்பவர்கள் சிவில் சமூகத்தினரை இலக்கு வைப்பதற்காக அரசாங்கம் பயங்கரவாதம் குறித்த பரந்துபட்ட வரைவிலக்கணத்தை பயன்படுத்தப்படக்கூடும். இது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமையை மீறுகின்றது. சுதந்திரமான பேச்சுக்கான உரிமையும் மீறப்படுகின்றது.

பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணம், பேச்சு சுதந்திரம், நடமாட்ட சுதந்திரம் ஆகியவற்றின் மீது கடும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக பொதுநலன்கள் குறித்த விடயங்களில் மக்கள் வெளிப்படையாக கருத்துக் கூற தயங்குவார்கள் - என்றும் கூறியுள்ளது.

(ஐ)

# புலிகளின் தொடர்பால் ஹரக்ஹட்டா தனியார் விமானத்தை பயன்படுத்தினார்!

## நீதிமன்றுக்கு சி. ஐ. டி. அறிக்கை

கொழும்பு, ஏப். 07

விடுதலைப் புலிகளின் தொடர்புகள் காரணமாக ஹரக்ஹட்டா தனியார் விமானம் ஒன்றைப் பயன்படுத்தினார் என்று நீதிமன்றத்தில் சி. ஐ. டி. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் நேரடிதொடர்புகளை கொண்ட ஒருவர் வழங்கிய நிதியை பயன்படுத்தியே ஹரக்ஹட்டாவும் குடு சலிந்துவும் தனியார் ஜெட் விமானங்களை பயன்படுத்தினார்கள் என்று

பாணந்துறை நீதிமன்றத்துக்கு சி. ஐ. டி. குற்ற அறிக்கை அளித்துள்ளுது.

விடுதலைப் புலிகளுடன் நேரடி தொடர்பை கொண்டுள்ள ஹேர்பி என அழைக்கப்படும் நிர்மன பண்டார என்பவரிடமிருந்து பெற்ற விமானத்தை பயன்படுத்தியே இருவரும் மடகாஸ்கர் சென்றுள்ளனர் என்றும் சி. ஐ. டியினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# சிறு கடற்றொழிலாளர்களை காக்க சர்வதேச சமூகம் உதவ வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, ஏப். 07

சிறு கடற்றொழிலாளர்களை பாதுகாத்து அவர்களின் வாழ்கை தரத்தை முன்னேற்ற தான் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சர்வதேச அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் சிறுகடற்றொழிலாளர்களை பாதுகாப்பது தொடர்பான ஆய்வு அறிக்கையின் அறிமுக நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒற்றுமை அமைப்பு, உலகளாவிய மூலோபாய வரைவுக்கான ஆலோசனைக் குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புக்களின் முயற்சியால் தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையின் அறிமுக நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் மெய்நிகர் வழியில் பங்கேற்ற அமைச்சர், "இலங்கையில் சுமார் 200,000 சிறு கடற்றொழிலாளர்கள் இருக்கின்ற நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் கடற்றொழில் அமைச்சு நடடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மேலும், இந்தியக் கடற்றொழிலாளர்கள் அத்துமீறி இலங்கை கடல் பரப்பினுள் நுழைந்து சட்ட விரோத தொழிலான இழுவைமடி வலை தொழிலை மேற்கொள்வதால் இலங்கையின் சிறுதொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






### மேடம்



குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உயரதிகாரிகள் உங்களை கலந்தாலோ சித்து சில முடிவுகள் எடுப்பார்கள். தொட்டது துலங்கும் நாள்.

### இடபம்



குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உங் களை மதித்துப் பேசுவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

### மிதுனம்



எதிர்ப்புகள் அடங்கும். புது வேலை அமையும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

### கடகம்



உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். தைரியம் கூடும்.

### சிம்மம்



குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். நிம்மதியான நாள்.

### கன்னி



ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பது நல்லது. அலைச்சல் நாள்.

### துலாம்



குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். பாக்கிகளை நயமாக வசூலிக்கப்பாருங்கள். பணிகளை போராடி முடிப்பீர்கள். தடைகள் தாண்டி முன்னேறும் நாள்.

### விருட்சிகம்



குடும்பத்தினருடன் மனம் விட்டு நல்லதை பேசுவீர்கள். பணவரவு உண்டு. விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். இனிமையான நாள்.

### தனுசு



தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிர்காலம் குறித்து ஆலோசிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் ஆதரவுக் கிடைக்கும்.

### மகரம்



கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். தள்ளிப்போன காரியங்கள் இன்று முடியும். லாபம் கிடைக்கும். பணி களை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

### கும்பம்



சந்திராஷ்டமம் இருப்பதால் வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

### மீனம்



உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப் புகள் வரும். வாகனத்தை சரி செய்வீர்கள். லாபம் பெருகும். சக ஊழியர்க ளுக்கு உதவுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# திருச்சி சிறப்பு முகாமிலிருந்து 7 இலங்கை தமிழர் விடுதலை!

திருச்சி, ஏப். 07

தமிழகம் - திருச்சி மத்திய சிறை வளாகத்தில் அமைந்துள்ள சிறப்பு முகாமில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை 7 இலங்கைத் தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

வெளிநாடுகளில் இருந்து போலி கடவுச்சீட்டு மற்றும் வீசா காலம் முடிந்தும் தமிழகத்தில் தங்கியவர்கள் அனைவரையும் தமிழக அரசு சிறப்பு முகாம்களில் வைத்து பராமரித்து வருகிறது. இதன்படி, இலங்கை, கம்போடியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த மொத்தம் 117 பேர் திருச்சி சிறப்பு முகாமில் சிறைப் படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானவர்களின் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அவர்கள் தங்களுடைய தாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படவில்லை.

இந்தநிலையில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக சிறப்பு முகாமில் தொடர் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த ஏழு பேருக்கு விடுதலைக்கான உத்தரவு ஆவணங்கள் கிடைத்ததை அடுத்து அவர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பலர் இந்த முகாமில் விடுதலை வேண்டி கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். (ஐ)

# இலங்கை அகதியின் மகனுக்கு கடவுச்சீட்டு

## உயர்நீதிமன்றம் உத்தரவு

மதுரை, ஏப். 07

இலங்கை தமிழருக்கும், இந்திய பெண்ணுக்கும் பிறந்தவருக்கு கடவுச்சீட்டு வழங்க மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையை சேர்ந்தவர் சகாயநாதன். இவர் இந்தியாவுக்கு 1990இல் அகதியாக வந்து சிவகங்கை நாட்டரசன்கோட்டை முகாமில் தங்கினார். இவர் சிவகங்கையைச் சேர்ந்த பேச்சியம்மாள் என்ற மேரி கிறிஸ்ரியானாவை காதலித்து 2001இல் சிவகங்கை தேவாலயத்தில் திருமணம் செய்து கொண்டார். இவர்களின் மகன் நியாசியஸ். இவர் வெளிநாட்டு வேலைக்குச் செல்வதற்காக கடவுச்சீட்டு கேட்டு மதுரை மண்டல கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு விண்ணப்பித்தார்.

அவரின் பிறப்பு சான்றிதழில் இலங்கை அகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்ததால், அது தொடர்பாக விளக்கம் கேட்டு கடவுச்சீட்டு அலுவலர் அறிவித்தல் அனுப்பினார். இந்நிலையில், கடவுச்சீட்டு அலுவலர் அனுப்பிய அறிவித்தலை இரத்து செய்து தனக்கு கடவுச்சீட்டு வழங்க உத்தரவிடக்கோரி நியாசியஸ் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, "மனுதாரருக்கு 3 வாரத்தில் கடவுச்சீட்டு வழங்க வேண்டும் - என்று உத்தரவிட்டார்.

# 12 தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கை படை தாக்குதல்!

## 5 மீனவர்கள் படுகாயம்

காரைக்கால், ஏப். 07

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த காரைக்கால், நாகை, மயிலாடுதுறை பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் 12 பேர் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டனர். இதில் 5 பேர் பலத்த காயமடைந்தனர்.

12 மீனவர்களும் கடந்த 1ஆம் திகதி காரைக்கால் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர்.

புதன்கிழமை நள்ளிரவு கோடியக்கரை அருகே இந்திய கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு கண்காணிப்பு படகில் வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களின் படகில் ஏறி துப்பாக்கி முனையில் மீனவர்கள் அனைவரையும் சரமாரியாக தாக்கி மீன்கள் மற்றும் வலைகள் உள்ளிட்டவையை பறித்துச் சென்றனர் என்று கூறப்படுகின்து.

காயப்பட்ட மீனவர்கள் காரைக்கால் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# பா. ஜ. க. மாநில தலைவர் கருத்தை ஏற்க முடியாது!

## அ. தி. மு. க. கட்சி

சென்னை, ஏப். 07

அ. தி. மு. க. தலைமையிலான கூட்டணியில்தான் பா. ஜ. க. இருக்கிறது. மேலிடத்தில் இருப்பவர்கள்தான் கூட்டணியை முடிவு செய்வார்கள். அவர்கள் கூட்டணியை உறுதி செய்துள்ளனர். எனவே, பா. ஜ. க. மாநிலத் தலைவரின் கருத்தை ஏற்க முடியாது - என்று முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

50 சதவீதத்துக்கு மேல் இட ஒதுக்கீடு கூடாது என்ற கருத்து எழுந்தபோது, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அனைத்து மாநில முதல்வர்களுக்கும் கடிதம் அனுப்பினார்.

இதிலிருந்து தமிழகத்துக்கு விலக்கு கோரி, அனைத்து கட்சியினரையும் அழைத்துச் சென்று, அப்போதைய பிரதமர் நரசிம்மராவை சந்தித்தோம். பின்னர், சட்டத் திருத்தம் மேற் கொண்டு, 69 சத வீத இடஒதுக்கீட்டை அ. தி. மு. க. அரசு உறுதி செய்தது. திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, சமூக நீதிகாத்த வீராங்கனை என்று ஜெயலலிதாவுக்கு பட்டமளித்தார்.

ஆனால், கருணாநிதி ஆட்சிக்கு வந்தபோது, இடஒதுக்கீட்டை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. சமூக நீதியைக் காலில் போட்டு மிதித்துவிட்டு, சமூக நீதி மாநாட்டை நடத்துகின்றனர்.



அ. தி. மு. க. தலைமையிலான கூட்டணியில்தான் பா. ஜ. க. இருக்கிறது. மேலிடத்தில் இருப்பவர்கள் தான் கூட்டணியை முடிவு செய்வார்கள். அவர்கள் கூட்டணியை உறுதி செய்துள்ளனர். எனவே, பா. ஜ. க. மாநிலத் தலைவரின் கருத்தை ஏற்க முடியாது - என்றார்.

# மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தடை போடுவதற்கு இடமில்லை!

## நடத்தப்படும் போராட்டங்கள் குறித்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கருத்து

கொழும்பு, ஏப். 07

**பொருளாதார மேம்பாட்டுக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் தடையான போராட்டங்களுக்கு இடமளிக்கமுடியாது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.**

பேருவளைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கம் எடுத்த கடுமையான தீர்மானங்களின் பயனை நாட்டு மக்கள் தற்போது பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

பொருளாதார முன்னேற்றத்தின் பயனை மக்களுக்கு நிச்சயம் வழங்குவோம்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் மாத்திரம் வலியுறுத்துகின்றன.

நாட்டு மக்கள் தேர்தலை கோரவில்லை மாறாக பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் கோருகிறார்கள்.

பொருளாதாரம் ஸ்திரமடைந்த பின்னர் எந்த தேர்தலையும் நடத்தலாம், எவரும் போட்டியிடலாம்.

ஜனநாயகப் போராட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

ஜனநாயகம் என்ற ரீதியில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் உண்மையில் ஜனநாயக போராட்டமா என்பதை மக்கள் ஆராய வேண்டும்.

மக்களாணையுடன் ஆட்சிக்கு வர முடியாத தரப்பினர் போராட்டங்கள் ஊடாக ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற முயற்சித்தார்கள்.

அது பாரதூரமான விளைவை ஏற்படுத்தியது. மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலான போராட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது - என்றார்.

(அ)

# அங்கொடை லொக்காவின் உதவியாளர் சிக்கினார்

கொழும்பு, ஏப். 07

அங்கொடை லொக்காவின் உதவியாளர் எனக் கூறப்படும் அத்துருகிரியே ஜெரோம் என்பவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் போதைப் பொருள் கடத்தல்காரர் என பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

அத்துருகிரிய பகுதியிலுள்ள கடையொன்றுக்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி, ஹோமாகம பொலிஸ் பிரிவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் ஜெரோம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை குறிப்பிட்டுள்ளது.

(அ)

# போலி மருத்துவர் கைது!

கொழும்பு, ஏப். 07

சிறுவர்களுக்கான லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் வைத்தியராக நடித்து மக்களை ஏமாற்றிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் ஒருவரை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாகக் கூறி 70,000 ரூபாவை ஏமாற்றியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யக்வில, பன்னல பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

(அ)

# சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பில்லாது ஊழலற்ற நாட்டை உருவாக்கமுடியாது

## விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 07

சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் ஊழல் இல்லாத நாட்டை உருவாக்க முடியாது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 21ஆம் திருத்தம் அதேபோன்று புதிய ஊழல் ஒழிப்பு சட்டமூலம் நாட்டின் எதிர்காலத் திசையை தீர்மானிக்கும் புதிய சட்டமாக அறிமுகப்படுத்தலாம்.

அத்துடன் புதிய ஊழல் ஒழிப்பு சட்டமூலம் ஊடாக தேவையான எந்த சந்தர்ப்பத்திலும் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக் கொள்ள முடியுமாகின்றது.

சட்ட ஆலோசனை மற்றும் சட்ட உதவி பெற்றுக்கொடுப்பதற்கும் தேவையான அதிகாரம் சட்டமா அதிபருக்கு



வழங்கி இருக்கிறது.

தற்போது செயற்படும் இலஞ்ச ஆணைக்குழு ஆணையாளர்களாக நியமிக்கப்படுபவர்கள் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளாவர்.

அந்த முறையை மாற்றி செயற்திறமையுடன் பொறுப்புக்கூறக்கூடிய இலஞ்ச ஆணைக்குழுச் சபை ஒன்றை அமைக்கும் நோக்கில் தகுதி வாய்ந்த சேவையில் இருக்கும் அரச அதிகாரிகள் மற்றும் சிவில் பிரதிநிதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் சுயாதீனம் என தெரிவிப்பதன் மூலம் மாத்திரம் தேவையற்ற சுதந்திரத்தை ஆணைக்குழுக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியாது - என்றார்.

# வைத்தியர்கள் தொடர் வெளியேற்றத்தினால் கடுமையான நெருக்கடியில் சுகாதாரத்துறை!

கொழும்பு, ஏப். 07

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையிலிருந்து ஒன்பது வைத்தியர்கள் வெளியேறியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, ஆறு மருத்துவர்கள் இரண்டு ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் விடுமுறை எடுத்துள்ளனர் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் நான்கு சிறுவர் வைத்திய நிபுணர்கள் வெளியேறியமையினால், சிகிச்சைப் பிரிவை அண்மையில் மூடிவிட்டு, சிகிச்சை பெற்ற சிறுவர் நோயாளர்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ராஜரட்டைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர் பிரிவுக்குச் சொந்தமான சிறுவர் பிரிவு மூடப்பட்டமையால் மருத்துவ மாணவர்கள் மருத்துவப் பயிற்சி பெறும் வாய்ப்பையும் இழந்துள்ளனர்.

இது தொடர்பில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் துலான் சமரவீரவிடம் கேட்ட போது, விசேட வைத்தியர்கள் வெளியேறியுள்ளதாகவும், மற்றுமொரு குழு வைத்தியர்கள் சென்றுள்ளதாகவும், எனினும் எத்தனை பேர் என கூற முடியாது எனவும் தெரிவித்தார்.

(அ)

# மன்னாரில் மழை பெய்யும்!

கொழும்பு, ஏப். 07

மேல், சப்ரகமுவ, தென், ஊவா, மத்திய, வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப் பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் சில



இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

சூரியனின் வடதிசை நோக்கிய இயக்கத்தின் காரணமாக, இவ்வருடம் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரை இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது. (அ)

# மக்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்த புதிய பயங்கரவாத தடைச் சட்டம் வழிவகுக்கும்!

## பேராசிரியர் ஜயதேவ உயங்கொட கருத்து

கொழும்பு, ஏப். 07

பொதுமக்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்துவதற்கு உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பயன்படுத்தப்படலாம் என பேராசிரியர் ஜயதேவ உயாங்கொட தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கம் சுமைகளை நலிந்தவர்கள், உழைக்கும் மக்கள், தொழிலாளர்கள் மீது சுமத்துகின்றது எனவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக நாட்டில் பாரதூரமான சமூக நெருக்கடிகள் உருவாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆளும் தரப்பு தற்போது மக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களை ஒடுக்க விரும்புகின்றது எனவும் பேராசிரியர் ஜயதேவ உயாங்கொட தெரிவித்தார்.

அதிருப்தியாளர்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தைப் பயன்படுத்தும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

(அ)



# வரி செலுத்துவது குறித்து சிலர் தவறான பிரசாரம்!

## அமைச்சர் பந்துல கூறுகிறார்



கொழும்பு, ஏப். 07

**36 வீதத்தை உழைக்கும் வரியாக செலுத்தவேண்டும் என்று சிலர் தவறான பிம்பத்தை சித்தரித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

மாதாந்தம் 147,000 ரூபா வருமானம் ஈட்டும் ஒருவர் வரியாக ரூபா 2500 மாத்திரமே செலுத்தவேண்டும் எனவும் அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

200,000 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுபவர் 7,500 ரூபாய் வரியாக செலுத்த வேண்டும்.

எரிவாயுவின் விலை 1005 ரூபாவினாலும் பெற்றோலின் விலை 60 ரூபாவினாலும் குறைக்கப்பட்டு வாரத்துக்கு 20 லீற்றர் பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அப்போது பெற்றோல் மூலம் மக்களுக்கு மாதம் ரூ.4800 லாபம் கிடைக்கிறது. எரிவாயு மற்றும் பெற்றோல் விலை குறைவினால், ஒரு நபருக்கு ரூ.5,805 சேமிப்பு கிடைக்கிறது.

காஸ், பெற்றோலைக் குறைப்பதால் அவருக்கு ரூ .6,000 லாபம் கிடைக்கும். 200, 000 சம்பாதிக்கும் நபர் 7,500 ரூபாயை அரசாங்கத்திற்கு வரியாக செலுத்துகிறார்.

ரூ. 100,000 க்கும் குறைவாக சம்பாதிக்கும் நபருக்கு வருமான வரி விதிக்கப்படுவதில்லை என்பதால் அவருக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால் அந்த நபர் மறைமுக வரி செலுத்துகிறார்.

100,000 ரூபாவுக்கும் குறைவான வருமானம் ஈட்டுபவர்கள் ஒவ்வொரு தனிநபரின் குறுகிய அரசியல் இலக்குகளை அடைவதற்காக போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

ஒரு நாட்டின் ஆசிரியர்கள் கற்பிப்பதை நிறுத்திவிட்டு போராட்டங்களில் ஈடுபட்டால், எதிர்காலச் சந்ததியினரின் கதி என்னவாகும். சம்பாதிக்கும்போது 36 சதவீதம் வரி கட்ட வேண்டும் என்ற போலி கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. அப்படி எதுவும் இல்லை.

அரசின் வருவாயை அதிகரித்து செலவுகளை குறைக்க வேண்டும். அரசாங்கத்தின் செலவினக் குறைப்பு சுற்றறிக்கையின் பிரகாரம் நான் முதலாவது உத்தியோகபூர்வ பயணமாக கொழும்பில் இருந்து மொஸ்கோ வரை சென்றேன். அரசு செலவினங்களை குறைக்கும் வகையில், அமைச்சர்கள் வெளிநாட்டு பயணங்களில் எக்கனமி வகுப்பில் பயணிக்க வேண்டும் என அரசு அறிவித்தது. அதன்படி ஒன்பது மணி நேரம் எக்கனமி வகுப்பில் பயணம் செய்தேன். நாங்களும் அத்தகைய தியாகங்களைச் செய்கிறோம் - என்றார். (அ)



# தெமோதரை ஒன்பது வளைவுப் பாலம் தேசிய மரபுரிமைச் சின்னமாகின்றது

கொழும்பு, ஏப். 07

தெமோதரை ஒன்பது வளைவுப் பாலத்தை தேசிய மரபுரிமை சின்னமாக பெயரிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், பேராசிரியர் அனுர மனதுங்க இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

குறித்த பாலத்தை பாதுகாத்து, அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மேலதிக தனியார் பஸ்கள் சேவையில்

கொழும்பு, ஏப். 07

தமிழ்-சிங்கள புத்தாண்டு விடுமுறை காலத்தில் கொழும்பில் இருந்து வெளியூர்களுக்குச் செல்லும் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தனியார் பஸ் சேவையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஏப்ரல் 10ஆம் திகதி முதல் விசேட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தேவையின் அடிப்படையில் பல்வேறு இடங்களுக்கு மேலதிக பஸ்கள் இயக்கப்படும்.

அரை சொகுசு பஸ் கட்டணத்தில் விசேட பஸ்கள் சேவையில் சேர்க்கப்படும் என்றும் அவர் உறுதிப்படுத்தினார். (அ)

# விபத்தின்போது மாற்றுத்திறனாளியான ஒருவரின் குடும்பத்துக்கு இராணுவம் ஊடாக வீடு கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 07

மாற்றுத் திறனாளி குடும்பத்துக்கு இராணுவத்தின் ஊடாக புதிய வீடு ஒன்று நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

துன்னாலை தெற்கு ஜே/370 கிராம சேவகர் பிரிவில் விபத்துக்கு உள்ளாகி மாற்றுத் திறனாளியான ஐந்து பேர் கொண்ட சதீஸ்வரன் ராஜேஸ்வரி குடும்பத்தினருக்கு கனடாவைச் சேர்ந்த தம்பி சின்னையா மற்றும் வன்னி எயிட்ஸ் நிதி அனுசரணையில் இந்த வீடு 4ஆவது சிங்க றெஜிமென்ற் படைப்பிரிவின் ஆளணி மற்றும் கட்டுமான உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

4ஆவது சிங்க றெஜிமென்ற் தளபதி லெப்டினன்ட் கேணல் தவுலுகல தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சர்ண போதொட்ட கலந்துகொண்டு வீட்டைப்



பயனாளியிடம் கையளித்தார்.

இதில் 551 ஆவது படைப்பிரிவு தளபதி பிரிகேடியர் யூட் காரியகரவண மற்றும் இராணுவத் தளபதிகள், கரவெட்டி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர், மதத் தலைவர்கள், அதிகாரிகள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# அஜித் நிவார்ட் கப்ராலுக்கு எதிரான மனு தள்ளுபடி!

கொழும்பு, ஏப். 07

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய போது அரசாங்க நிதியை துஷ்பிரயோகம் செய்ததாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டை நிராகரிப்பதாக கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

அஜித் நிவார்ட் கப்ராலின் சட்டத்தரணிகள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகளை ஏற்று கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

தீர்ப்பை அறிவித்த நீதிவான், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கு போதுமான உண்மைகளை முன்வைக்க மனுதாரர் தவறிவிட்டார் என்று கூறினார்.

அதன்படி, சம்பந்தப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்படுவதாக நீதிபதி தெரிவித்தார்.

தென் மாகாண முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோனினால் இந்த தனிப்பட்ட முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

2006 முதல் 2015 வரையான காலப்பகுதியில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக செயற்பட்டு, 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச இறையாண்மைப் பத்திரங்களுக்கு செலுத்தி, அமெரிக்க உளவாளியான இமாட் சுபேரிக்கு அமைச்சர்கள் சபையின் அனுமதியின்றி பணம் செலுத்தியிருந்தார். இது இலங்கையின் நற்பெயரை உயர்த்துவதற்காகவே என்று கூறப்பட்டது. இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக கப்ராலுக்கு எதிராக இந்த தனிப்பட்ட முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (அ)

# தம்புள்ளையில் மரக்கறி விற்பனையில் வீழ்ச்சி!

கொழும்பு, ஏப். 07

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதற்கு விற்ப னையாளர்கள் இன்மையால் 06 நாட்களாக விவசாயிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக விவ சாயிகள் சுட்டிக்காட்டினர்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் 06 நாட்களாக ஒரு கிலோ பூசனிக்காயின் மொத்த விலை 15 ரூபாவாக காணப்பட்டதுடன், ஒரு கிலோ போஞ்சி மொத்த விற்பனை விலையும் 60 ரூபா தொடக்கம் 80 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டமை விசேட அம்சமாகும்.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் ஏனைய அனைத்து மரக்கறிகளின் விலைகளும் 70 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், காய்கறிகள் விற்பனை செய்யப்படாமை பாரிய பிரச்னையாக காணப்படுவதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். (அ)

# வெப்பமான காலநிலை மே இறுதி வரை தொடரும்

கொழும்பு, ஏப். 07

நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை மே மாதம் இறுதி வாரம் வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் இணை இயக்கு நர் பிரித்திகா ஜெயக்கொடி தெரிவிக்கையில்-

இன்றைய நாட்களில் நமது உடல் வியர்வை அதிகமாக வெளியேறுகிறது. அதிக வெப்பம் காரணமாக, உடல் அசௌகரியமாக உணர்கிறது. இலங்கையைச் சுற்றியுள்ள வளிமண்டலத்தில் காற்றின் ஓட்டம் குறைந்ததே இதற்கு முக்கியக் காரணம். இந்த நிலை மே இறுதி வரை இருக்கும். தினமும் இடியுடன் கூடிய மழை பெய்து வருவதால் வளிமண்டலத்தில் குளிர்ச்சி நிலவுகிறது.

எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதி வரை நிலவும் வெப்பம் மற்றும் ஈரப்பதமான காலநிலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. வானம் மேகமூட்டம் இல்லாமல் காணப்படுவதாலும் சூரிய ஒளி நேரடியாக பூமியின் மீது படுவதாலும் வெப்பமான காலநிலை அதிகமாக உணரப்படும் - என்றார். (அ)

# ருமேனியாவில் புதிய தூதரகம்!

கொழும்பு, ஏப். 07

ருமேனியாவில் புதிய தூதரகத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் சர்வதேச உறவுகளுக்கான துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் தெரிவித்தனர்.

மேற்படி குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியது.

ருமேனியாவில் கணிசமான இலங்கை மக்கள் வசிப்பதால், அவர்களின் குறைகளை ஆராய அங்கு இலங்கைத் தூதரகம் இல்லை எனவும், மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ருமேனியாவில் தூதரகத்தை அமைப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஊழியர்களின் எண்ணிக்கை ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டதால், தூதரகம் அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு குழு உத்தரவிட்டுள்ளது. (அ)

# தமிழரின் நில அபகரிப்புக்கு தீர்வு காணப்படவேண்டும்

## வலியுறுத்துகின்றது பிரிட்டன்



லண்டன், ஏப். 07

**இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் நில அபகரிப்புகளுக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.**

பிரிட்டனின் தெற்காசிய இராஜாங்க அமைச்சர் அஹ்மட் பிரபு இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக பிரிட்டன் அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் என்ன விடயங்களை முன்வைத்துள்ளது என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், 51-1 தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான சர்வதேச முயற்சிகளை ஐக்கிய இராச்சியம் வழிநடத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

இது, இலங்கை தொடர்பாக அறிக்கையிடுவதற்கும் கடந்த கால மனித உரிமை மீறல்களின் ஆதாரங்களை பாதுகாப்பதற்கும், எதிர்காலப்பொறுப்புக்கூறல் செயல்முறைகளில் பயன்படுத்துவதற்கும், மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு உதவியுள்ளதாக அவர் கூறினார்.

பெப்ரவரியில் இலங்கையின் உலகளாவிய காலமுறை மீளாய்வின்போது வடக்கு மற்றும் கிழக்கில் காணி அபகரிப்பு தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியம் உள்ளிட்ட வலியுறுத்தல்களை பிரித்தானியா வழங்கியது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# 196 கிலோ ஹெரோயினுடன் கைதாகிய ஐவர் விடுதலை!

கொழும்பு, ஏப். 07

196 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயினுடன் சர்வதேச கடல் எல்லையில் கைது செய்யப்பட்ட 5 பிரதிவாதிகளை விடுதலை செய்து நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த பிரதிவாதிகள் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

ஹெரோயின் இறக்குமதி, கடத்தல் மற்றும் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கில், நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே தலைமையிலான மூவரடங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்று இந்த தீர்ப்பை வழங்கியது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் வழங்கிய சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளதாலும், குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததாலும் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்வதாக நீதிபதிகள் குழாம் ஏகமனதாக தீர்மானித்துள்ளது. (அ)

# ஆயிரம் கோடி டொலரை இலங்கை இழக்க நேரிடும்!

கொழும்பு, ஏப். 07

"எக்ஸ்பிரஸ் பேர்ள்" கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பான சட்ட நடவடிக்கையை அடுத்த 45 நாட்களுக்குள் ஆரம்பிக்காவிட்டால், 10 பில்லியன் (1000 கோடி) அமெரிக்க டொலர் இழப்பீட்டுத் தொகையை இலங்கை இழக்க நேரிடும் என சுற்றுச்சூழல் நீதி மையம் எச்சரித்துள்ளது.

இலங்கைச் சட்டத்தின் கீழ், சம்பவம் நடந்த இரண்டு ஆண்டுகளுக்குள், அதன் மூலம் 2023 மே 29 இற்கு முன், இழப்பீடு கோருவதற்கான வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும் என்று சுற்றுச்சூழல் நீதி மையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்யத் தவறினால் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் அமைச்சரவையின் தோல்வியாக அமையும் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. (அ)

# களனிதிஸ்ஸ மின்நிலையம் மீண்டும் இலங்கை மின்சார சபையின் வசம்!

கொழும்பு, ஏப். 07

தனியார் வசமுள்ள களனிதிஸ்ஸ மின்நிலையத்தை மீண்டும் இலங்கை மின்சார சபை கையகப்படுத்தியுள்ளது.

163 மெகாவோட் மின்னுற்பத்தி செய்யக்கூடிய குறித்த மின்நிலையம் தனியார் நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வந்த நிலையில், கடந்த 28ஆம் திகதி மீண்டும் இலங்கை மின்சார சபையினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மின்நிலையத்தை கையகப்படுத்தும் நடவடிக்கை கடந்த ஆண்டின் இரண்டாம் பாதியில் ஆரம்பிக்கப்பட்டது.

மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இந்த கையகப்படுத்தல் இடம்பெற்றுள்ளது.

இதன்மூலம் இலங்கை மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தி திறன்163 மெகா வோட்டினால் அதிகரித்துள்ளது. (அ)

# கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு புதிய தலைவராக உபுல் நியமனம்

கொழும்பு, ஏப். 07

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக தென் மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் டி.வி. உபுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்றொழில் மற்றும் நீர் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய தலைவர் முன்னாள் மீன்பிடி அமைச்சரும் தற்போதைய பெற்றோலிய வள இராஜாங்க அமைச்சருமான டி.வி. சானக்கவின் தந்தையாவார். (அ)

# ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியீடு

கொழும்பு, ஏப். 07

ஊழலுக்கு எதிரான சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

சொத்துகளுடன் தொடர்புடைய இலஞ்சம், ஊழல் மோசடி குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளைக் கண்டறியவும் விசாரணை செய்யவும் வழக்கு தொடரவும் சுயாதீன ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கான சந்தர்ப்பம் இதனூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை விஸ்தரிப்பதும் மக்களுக்கான தெளிவூட்டலை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும். (அ)

# இறக்குமதியாகும் முட்டையில் எவ்வித பிரச்னையும் இல்லை!

கொழும்பு, ஏப். 07



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டையில் எவ்வித பிரச்னையும் இல்லை எனவும் இந்த நாட்டு முட்டைகளுடன் ஒப்பிடும் போது, இந்திய முட்டைகள் அதிக தூய்மை மற்றும் தரம் வாய்ந்தவை என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என். கே.ஜெயவர்தன தெரிவித்தார்.

இந்திய முட்டைகள் தொடர்பில் சிலர் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கைக்கு திரவ முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும், பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை இந்த நேரத்தில் குறைக்க முடியுமா என்பது குறித்து மேலும் ஆராயவேண்டும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்கள் இணையவழியில்!

கொழும்பு, ஏப். 07

பிறப்பு,இறப்பு மற்றும் திருமண பதிவுச் சான்றிதழ்களை இணைய வழியில் நேற்று முதல் பெற்றுக்கொள்ள முடியும்.

https://online.ebmd.rgd.gov.lk என்ற இணையத் தளத்திற்குள் பிரவேசித்து சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையைச் சமர்ப்பிக்க முடியும்.

www.rgd.gov.lk என்ற இணையத்தளத்திலும் 011 2889518 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# அரசாங்கத்துடன் இணைந்தால் எம்.பிக்களுக்கு ரூ.200 மில்லியன்

## எதிரணி எம்.பி. பரபரப்பு தகவல்

கொழும்பு, ஏப். 07

எதிர்க்கட்சியிலிருந்து எவரேனும் அரசாங்கத்துடன் இணைவார்களாயின் அவர்களின் நோக்கம் பணமும் , அமைச்சுப் பதவிகளுமே தவிர நாட்டின் அபிவிருத்தி அல்ல என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்தார்.

அமைச்சுப் பதவியில் மோகமும், 200 மில்லியனை விரும்புபவர்களுமே அரசாங்கத்துடன் இணைவர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆளுந்தரப்பினர் கூறுவதைப் போன்று எதிர்க்கட்சியிலிருந்து எவரும் அரசாங்கத்துடன் இணையப்போவதில்லை. மாறாக எவரேனும் இணைவார்களாயின் அது 200 மில்லியன் ரூபாவுக்கும், அமைச்சுப் பதவிகளுக்குமேயாகும். 200 மில்லியனை விரும்புபவர்களும் இருக்கக்கூடும்.

அவ்வாறானவர்கள் அரசாங்கத்தில் இணைவது நாட்டுக்காக அல்ல மக்களுக்கு நன்மையான திட்டங்களுக்கு எதிர்க்கட்சியிலிருந்து கொண்டே நிச்சயம் ஒத்துழைப்பை வழங்குவோம். அதற்காக அரசாங்கத்தில் இணையவேண்டுமென்ற தேவை கிடையாது.

பிரதான எதிர்க்கட்சியாக நாம் எமது கடமைகளை நிறைவேற்றுவோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்திற்கு வருவதற்கு முன்னரே 2019 இல் சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டும் என்பதை நாம் வலியுறுத்தினோம்.

அன்று நாம் கூறியதை முற்றாக எதிர்த்தவர்கள் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகக் கூறியவுடன் , மேசைகளைத் தட்டி கரகோஷம் எழுப்புகின்றனர்.

இவ்வாறான இரட்டை நிலைப்பாடுடையவர்களே அரசாங்கத்தில் உள்ளனர். எதிர்க்கட்சியிலிருந்து எவரேனும் அரசாங்கத்தில் இணைவார்களாயின் அமைச்சுக்கள் அதிகரிக்கப்பட்டு அதன் மூலம் மக்கள் மீதான சுமை மேலும் உயர்வடையுமே தவிர , நாட்டுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது - என்றார். (அ)

# அருணாச்சல பிரதேச மாநிலத்தில் புதிய பெயர்களை சூட்டிய சீனா!

## நிராகரித்தது இந்தியா!!


அருணாச்சல பிரதேசத்தின் மீது நீண்டகாலமாக உரிமைக்கோரி வரும் சீனா, கடந்த ஞாயிற்றுக்கிழமை யன்று, அருணாச்சல பிரதேசத்தில் உள்ள 11 இடங்களுக்கு புதிய பெயர்களை சூட்டி அறிவிப்பு வெளியிட்டது. இந்த நிலையில், சீனாவின் இந்த அறிவிப்பை தற்போது இந்தியா முற்றிலுமாக நிராகரித்துள்ளது.

இதுகுறித்து இந்தியாவின் வெளியுற வுத்துறை செய்தித் தொடர்பாளர் அரிந் தம் பக்ஷி கூறுகையில், ‘அருணாச்சல பிரதேச மாநிலம் எப்போதும் இந்தியாவு டன் ஒருங்கிணைந்த மற்றும் இந்தியாவி டமிருந்து பிரிக்க முடியாத பகுதியாகவே இருக்கும்” என்று தெரிவித்துள்ளார்.

இமயமலையை ஒட்டியுள்ள எல்லைப் பகுதியில் இந்தியாவிற்கும், சீனாவிற்கும் நீண்டகாலமாக பிரச்னைகள் நிலவி வரு கின்றன. இந்நிலையில், இந்த எல்லை பகு தியில் இருக்கும் 11 இடங்களுக்குதான் சீனா புதியதாக பெயர்களை அறிவித்துள் ளது. சீனாவின் இந்த அறிவிப்பிற்கு பின் னர், தற்போது இந்தியாவின் வெளியுற வுத்துறை செய்தித் தொடர்பாளர் அதை இந்தியா முற்றிலும் நிராகரிப்பதாக தெரி வித்துள்ளார்.

இந்தியாவின் இந்த நிராகரிப்பிற்கு சீனா இதுவரை எந்த எதிர்வினையும் ஆற் றவில்லை.

இந்தியாவும், சீனாவும் மிக நீளமான சர்ச்சைக்குரிய எல்லைப்பகுதியை தங்க ளுக்குள் பகிர்ந்து வருகின்றன. சுமார் 3440கிமீ தூரத்திற்கு இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையிலான அந்த எல்லைப் பகுதிகள் நீள்கின்றன. இந்தப் பகுதியை மெய்யான கட்டுப்பாட்டு கோடு என குறிப்பிடுகின்றனர். அதேசமயம் இந்த எல்லைப்பகுதியானது மிக மோசமான வகையில் வரையறுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.



ஏனெனில் இவற்றுக்கு இடையில் ஆறு கள், குளங்கள் மற்றும் பனி படலங்கள் இருக்கின்றன. இதன் காரணமாக அந்த எல்லை கோடுகளில் அவ்வபோது மாற் றங்கள் நிகழலாம் என கூறப்படுகிறது.

அருணாச்சல பிரதேசத்தின் முழுப் பகு தியையும் சீனா உரிமை கோருகிறது. அரு ணாச்சல பிரதேசத்தை சீனா ‘தெற்கு திபெத்’ என அழைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

**இந்தியா, சீனா,எல்லை பிரச்னை**

உலகின் மிகப்பெரும் இரு ராணுவப்ப டைகள், இந்த எல்லை பிரச்னைகளின் காரணமாக, பலமுறை நேருக்கு நேர் மோத வேண்டிய சூழல்கள் ஏற்பட்டிருக் கின்றன. கடைசியாக டிசம்பர் மாதத்தில், தவாங் நகரத்தில் இரு நாட்டின் ராணுவப் படைகளும் மோதி கொண்டன.

அதேபோல், எல்லைப்பகுதி இடங்க ளுக்கு சீனா இதுபோன்று புதிதாக பெயர் களை அறிவிப்பது முதல்முறை அல்ல. ஏற்கனவே சிலமுறை இதுபோன்ற செயல் களில் சீனா ஈடுபட்டுள்ளது அது இந்தி யாவிற்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏப்ரல் 1ஆம் தேதி, சீனாவின் உள்நாட்டு விவகாரத் துறை அமைச்சகம், “தெற்கு திபெத்தில் (அருணாச்சல பிரதே சம்) உள்ள இடங்களின் பெயர்களை மாற் றியதன்” மூலம் இருநாடுகளுக்கும் இடையே மீண்டும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

அருணாச்சல பிரதேசத்தின் தலைநகர மான இடாநகர் பகுதியை ஒட்டியுள்ள மலை, ஆறு மற்றும் மக்கள் வசிப்பிட பகுதிகளும் அந்த ‘பெயர் மாற்றப்பட்ட இடங்களுக்குள்’ வருகின்றன.

இந்தியாவின் வடகிழக்கு மாநில பகுதி களில், சீனாவால் எந்தவொரு மாற்றத்தை யும் கொண்டு வரமுடியாது என இந்தியா அறிவித்துள்ளது.

“இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுப டுவது சீனாவிற்கு முதல் முறை அல்ல. ஆனால் அதேசமயம் சீனாவின் இந்த செயல் களை இந்தியா முற்றிலும் நிராகரிக்கிறது” என்று அரிந்தம் பக்ஷி தெரிவித்துள்ளார்.

“அருணாச்சல பிரதேசம் இந்தியாவுடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும். புதிய பெயர்களை சூட்டும் முயற்சிகளின் மூலம் சீனாவால் எந்தவொரு மாற்றத்தையும் கொண்டு வரமுடியாது” எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னதாக 2017 ஆம் ஆண்டு, இந்தியாவிற்கு தலாய் லாமா வருகை புரிந் ததற்கு, “பதிலடி கொடுக்கும் விதமாக”, அருணாச்சல பிரதேசத்தின் 6 மாவட்டங் களுக்கு சீனா புதியதாக பெயர்களை அறி வித்தது. திபெத்தியர்களின் மத குருவாக கருதப்படும் தலாய் லாமா, இந்தியாவிற்கு 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வருகை புரிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்கு பிறகு, இரண்டாம் முறையாக கடந்தாண்டு டிசம்பர் மாதம் அருணாச்சல பிரதேசத்தின் மற்றொரு 15 இடங்களுக்கு புதிய பெயர்களை சூட்டியது சீனா. ஆனால் சீன அரசின் இதுபோன்ற அனைத்து நட வடிக்கைகளுக்கும் இந்தியா கடுமையான மறுப்புகளை தெரிவித்து வருவது குறிப்பி டத்தக்கது.

# அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் ரத்தானது ஏன்?

தமிழகத்தின் அ.தி.மு.க.,வில் மாவட்ட செயலர்கள் கூட்டத்தை தொடர்ந்து, இன்று 7ம் திகதி நடக்கும் என அறிவிக்கப்பட்ட, செயற்குழு கூட்டமும் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. கூட்டத்தை அறி விப்பதும், அதை அடுத்தடுத்து ரத்து செய்வதுமான, பொதுச் செயலர் பழனிசாமியின் அதிரடி நடவடிக்கை கள், நிர்வாகிகள் இடையே குழப்பத்தை ஏற்படுத்தி உள் ளன.

கட்சியை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர, கடந்த ஆண்டு ஜூலை 11ல், அ.தி.மு.க., பொதுக்குழுவை பழனி சாமி கூட்டினார். இக்கூட்டத்தில், கட்சியின் இடைக் கால பொதுச் செயலராக பழனிசாமி தேர்வு செய்யப் பட்டார். பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர் கள், கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதை எதிர்த்து பன்னீர்செல்வம் நீதிமன்றம் சென்றார். “பொதுக்குழு நடத்தியது செல்லும்' என, உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதைத் தொடர்ந்து, கட்சியின் பொதுச் செயலர் தேர்தலை பழனிசாமி அறிவித்தார்.

கடந்த மாதம், 28ம் திகதி கட்சியின் பொதுச் செயல ராக, பழனிசாமி ஒரு மனதாக போட்டியின்றி தேர்வு செய் யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அன்றைய தினமே, பொதுச் செயலராக அவர் பொறுப்பேற்றார்.

பல்வேறு போராட்டங்களுக்கு பின், பொதுச் செயல ராக தேர்வான பழனிசாமி, கட்சியின் மாவட்ட செயலர் கள் கூட்டத்தை கூட்ட முடிவு செய்தார்.

இன்று 7ம் திகதி மாலை, அ.தி.மு.க., தலைமை நிர்வா கிகள், மாவட்ட செயலர்கள் கூட்டம் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்பின், அந்தக் கூட்டம் ரத்து செய்யப்பட்டது.



அதற்கு பதிலாக அன்று பகல், 12:00 மணிக்கு, அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில், கட்சி செயற் குழு உறுப்பினர்கள், தலைமை நிர்வாகிகள், மாவட்ட செயலர்கள், பிற மாநில செயலர்கள், எம்.பி.,க்கள், எம். எல்.ஏ.,க்கள், மகளிர் தலைமை செயற்குழு உறுப்பினர் கள் என, அனைவரும் பங்கேற்கும் செயற்குழு கூட்டம் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

இப்போது அந்தக் கூட்டமும் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு சில காரணங்களால், கூட் டம் ரத்து செய்யப்படுகிறது என, அ.தி.மு.க., தலைமை தெரிவித்து உள்ளது.

பன்னீர்செல்வம் ஒரு முடிவில் திடமாக இருக்க மாட் டார் பழனிசாமி எந்த முடிவு எடுத்தாலும் திடமாக இருப் பார் என, அவரது ஆதரவாளர்கள் கூறி வந்த நிலையில், பொதுச் செயலராக பொறுப்பேற்ற பின், அவர் அறிவித்த கூட்டம் வரிசையாக ரத்து செய்யப்படுவது, கட்சியினரி டம் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

இன்று புனித வெள்ளி என்பதால், அரசு விடுமுறை. நாளை பிரதமர் சென்னை வருகிறார். அ.தி.மு.க., பொதுச் செயலராக பழனிசாமி தேர்வு செய்யப்பட்டதை, நீதிமன் றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில், இறுதி தீர்ப்பு வரும் வரை ஏற்கக்கூடாது என, தேர்தல் கமிஷனில், இருவர் மனு அளித்துள்ளனர்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, நல்ல நாள் பார்த்து கூட்டம் நடத்துவார். ஆனால், அதற்கு முன் அறிவித்து விட்டு ரத்து செய்வார். அவரது பாணியை பழனிசாமி கடைப்பிடிக்கிறார். தேய்பிறையில் செயற்கு ழுவை நடத்த விரும்பாததால், செயற்குழு கூட்டத்தை ரத்து செய்துள்ளார்.

மேலும், இன்று திருநெல்வேலி, தென்காசி, நாமக்கல், ஈரோடு, கோவை உள்ளிட்ட, 13 மாவட்ட செயலர்கள், குடும்ப சுப நிகழ்ச்சிகள் உட்பட, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க இருப்பதால், அன்றைய தினம் கூட்டத்துக்கு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்ட செய லர்கள் வராவிட்டால், பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள், அதை தங்களுக்கு சாதகமாக்கி வீண் குழப்பத்தை ஏற்ப டுத்த முயற்சிப்பர். இதை தவிர்க்க, வளர்பிறை நாளான, 21ம் தேதி செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தை நடத்த, பழனிசாமி திட்டமிட்டுள்ளதாக, கட்சி நிர்வாகி கள் தெரிவித்துஉள்ளனர்.

அதேநேரம், பா.ஜ., உடனான கூட்டணி தொடர்பாக, கட்சியின் இரண்டாம் மட்ட தலைவர்கள் இடையே, கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இந்த சூழலில், செயற் குழு கூட்டத்தை கூட்டினால், கூட்டத்தில் பிரச்னை வெடிக்க வாய்ப்புள்ளது. நாளை பிரதமர் வரும் நிலையில், கூட்டணி குறித்து யாரேனும் கருத்து தெரிவிக்க, அது தர்ம சங்கடத்தை ஏற்படுத்தி விடக் கூடாது என்பதற்கா கவே, கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்ப டுகிறது.

# எம்.பி. ஒருவர் 75 ஆயிரம் ரூபாவை வரியாகச் செலுத்துகின்றார்!

## இதோ பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அறிந்துகொள்ளுங்கள்

பிரகீத் சம்பத் கருணாதிலக

உழைக்கும்போதே செலுத்தும் வரி **(Pay As You Earn -- PAYE )** முறையின் கீழ் அரசாங்கம் வேறுபட்ட வருமான வரைமுறைகளை அறிமுகம் செய்திருக்கிறது. 100,000 ரூபாவுக்கும் 141,667 ரூபாவுக்கும் இடைப்பட்ட மாதாந்த சம்பளத்தை பெறும் ஒருவர் 100,000 ரூபாவுக்கு மேலாக பெறு கின்ற சம்பளத்துக்கு 6 சதவீத வரியைச் செலுத்த வேண்டும். அதேபோன்றே 141,667 ரூபாவுக்கும் 183,333 ரூபாவுக்கும் இடைப்பட்ட மாதாந்த சம்பளத்தை பெறுபவர் 12 சதவீத செலுத்தவேண்டும்.

183,333 ரூபாவுக்கும் 225, 000 ரூபாவுக்கும் இடைப்பட்ட சம்பளத்தை பெறுபவர் 18 சதவீதத்தையும் 225,000 ரூபாவுக்கும் 226,267 ரூபாவுக்கும் இடைப்பட்ட சம்பளத்தை பெறுபவர் 24 சதவீதத்தையும் 226,267 ரூபாவுக்கும் 308,333 ரூபாவுக்கும் இடைப்பட்ட சம்பளத்தை பெறுபவர் 30 சதவீதத்தையும் வரியாக செலுத்தவேண்டும்.

ஒவ்வொரு சம்பளத் திட்டத்திலும் அடிநிலையாக இருக்கின்ற தொகைக்கு மேலதிகமாக சம்பாதிக்கின்ற தொகையே வரிக்கு உட்படுத்தப்படுகிறது. மாதாந்தம் 308,000 ரூபாவுக்கும் அதிகமான சம்பளத்தைப் பெறுபவரிடமிருந்து 36 சதவீத வரி அறவிடப்படும்.

பல்வேறு பதவிநிலைகளில் இருக்கின்ற உயர்ந்த சம்பளங்களைப் பெறும் திறத்தொழிலர்களும் **(Professionals)** வரி அறவீட்டுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அதே போன்றே கௌரவ சேவை செய்பவர்கள் என்று கருதப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களிடம் இருந்தும் வரி அறவிடப்படுகிறது. அவர்கள் ஒரு ஐந்து வருடங்களுக்கு சேவையில் இருக்கிறார்கள். அந்த பதவிக் காலம் முடிவடைகின்றபோது அவர்கள் ஓய்வூதியத்துக்கும் உரித்துடையவர்கள்.

உதாரணத்துக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒரு ஐந்து வருட பதவிக்காலத்துக்காக 18,091 ரூபாவை மாதாந்த ஓய்வூதியமாக பெறுகிறார். மறுபுறத்தில் அமைச்சர்களும் எதிர்க்கட்சி தலைவரும் தங்களது சேவைக்காக 21,666 ரூபாவை ஓய்வூதியமாக பெறுகிறார்கள். சபாநாயகர் தனது ஐந்து வருட சேவைக்காக 22,833 ரூபா 50 சதத்தை ஓய்வூதியமாக பெறுகின்ற அதேவேளை ஐந்து வருட பதவிக்காலத்தை பூர்த்திசெய்யும் ஒரு பிரதமருக்கு ஓய்வூதியமாக 23,500 ரூபாவை கிடைக்கிறது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மொத்தச் சம்பளம் பெருமளவுக்கு அவர் பெறுகின்ற கொடுப்பனவுகளை **(Allowances )** உள்ளடக்கியதாக இருக்கிறது. பிரதமர் மாதாந்த அடிப்படைச் சம்பளமாக 71,500 ரூபாவை பெறுகிறார். பாராளுமன்ற சபாநாயகரின் சம்பளம் 68,000 ரூபாவாக இருக்கின்ற அதேவேளை பிரதி சபாநாயகரின் அடிப்படைச் சம்பளம் 63,500 ரூபாவாக இருக்கிறது.

கபினெட் அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும் அடிப்படைச் சம்பளமாக 65,000 ரூபாவை பெறுகிறார்கள். எதிர்க்கட்சி தலைவருக்கும் அதே சம்பளம்.

பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அடிப்படைச் சம்பளமாக 54,285 ரூபாவை பெறுகிறார்கள். அவர்கள் போக்குவரத்து கொடுப்பனவாக 15,000 ரூபாவையும் தொலைபேசி கொடுப்பனவாக 50,000 ரூபாவையும் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்கும் ஒவ்வொரு தினத்துக்கும் கொடுப்பனவாக 2,500 ரூபாவையும் பெறகிறார்கள். மேலதிகமாக பொழுதுபோக்கு கொடுப்பனவாக 4,500 ரூபாவையும் அலுவலகம் ஒன்றைப் பேணுவதற்கான கொடுப்பனவாக 100,000 ரூபாவையும் அவர்கள் மாதாந்தம் பெறுகிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் எரிபொருள் கொடுப்பனவு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்துக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான தூரத்தை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய எரிபொருட்களின் விலைகளில் நிர்ணயிக்கப்படுகிறது. அவர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரி அடிப்படைச் சம்பளத்தையும் இந்த கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய தொகையை வைத்து கணிப்பிடப்படுகிறது.



மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய ஒரு மோட்டார் வாகன பெர்மிட் வழங்கப்படுகிறது. சில அமைச்சர்கள் தங்களது அமைச்சுக்களில் மூன்று அல்லது நான்கு வாகனங்களையும் கூட பயன்படுத்துகிறார்கள். 15 பேர் வரையிலான உதவி பணியாளர்களை வைத்திருக்க அமைச்சர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளர் மாதாந்தம் 100 மணித்தியாலங்கள் மேலதிக நேர வேலை கொடுப்பனவை பெறுவதற்கு உரித்துடையவர் என்பதுடன் தற்போதைய விலையின் அடிப்படையில் எரிபொருள் கொடுப்பனவும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு உதவியாளராக ஒரு ஊழியரை நியமிக்கலாம். அந்த ஊழியர்கள் பெரும்பாலும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களாகவே இருக்கிறார்கள்.

இந்த பணியாளர்களும் உத்தியோகபூர்வ வாகனங்களையும் தொலைபேசி கொடுப்பனவுகளையும் பெறுகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 6 பேரை உள்ளடக்கிய உதவி பணியாளர்கள் குழு வழங்கப்படுகிறது. தொலைதூர மாகாணங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா வாடகைக்கு மாதிவெல வீடமைப்பு திட்டத்தில் வீடும் வழங்கப்படுகிறது.

அமைச்சர்கள் தங்களது பதவிக்காலத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கு உரித்துடையவர்கள். மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் 50 இலட்சம் ரூபாவும் 20 இலட்சம் ரூபா வரையான காப்புறுதியும் கிடைக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பயங்கரவாத தாக்குதலில் அல்லது விபத்தில் இறந்தால் அவரது குடும்பத்துக்கு 60 இலட்சம் ரூபா வழங்கப்படுகிறது. இந்த சிறப்பு சலுகைகள் எல்லாம் அவர்களுக்கு ஐந்து வருட சேவைக்காலத்தின் போது கிடைக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தனது சம்பளத்திலும் வாழ்க்கையிலும் வருமானவரியின் தாக்கம் குறித்து அண்மையில் விசனம் தெரிவித்தார். தனது சம்பளத்தில் 36 சதவீதம் (77,466ரூபா 72 சதம் ) வருமான வரியாக கழிக்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார். அடிப்படைச் சம்பளமும் சகல கொடுப்பனவுகளும் உள்ளடங்கலாக அவரின் மாதாந்த சம்பளம் 350,000 ரூபாவுக்கும் அதிகமாகும்.

ஆனால் குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் தங்களின் வருமானங்கள் பெறகின்ற கொடுப்பனவுகளைப் பொறுத்து வேறுபடுகிறது என்று சுட்டிக்காட்டினார். யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினரதும் குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரதும் கொடுப்பனவுகள் வேறுபட்டவை என்று அவர் கூறினார். மாதாந்தம் தனது சம்பளத்தில் சுமார் 83,000 ரூபா வருமான வரியாக கழிக்கப்படுகிறது என்று தனது சம்பளம் சுமார் 300,000 ரூபா என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படைச் சம்பளம் 54, 285 ரூபா. அவர்கள் எரிபொருள் மற்றும் அலுவலக கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்கள். எரிபொருட்களின் விலைகள் உயர்ந்த போது கடந்த காலத்தில் எரிபொருள் கொடுப்பனவு மாத்திரம் அதிகரிக்கப்பட்டது. வழங்கப்படுகின்ற எரிபொருளின் அளவும் அதற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டது என்று அந்த குருநாகல் பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மாத்திரமே எரிபொருள் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது.

தனது சம்பளத்தில் இருந்து வருமான வரியாக சுமார் 100,000 ரூபா கழிக்கப்பட்டதாக கபினெட் அமைச்சர் ஒருவர் கூறினார். இராஜாங்க அமைச்சர் ஒருவரின் சம்பளத்தில் இருந்து சுமார் 85,000 ரூபா வருமான வரியாக கழிக்கப்பட்டதாகவும் அந்த அமைச்சர் கூறினார்.

பாராளுமன்ற அமர்வில் பங்கேற்றால் தினமொன்றுக்கு 2,500 ரூபா கிடைக்கிறது. மாதமொன்றுக்கு 8 அமர்வுகளே இடம்பெறுகின்றன. அமைச்சர்களின் சம்பளம் எரிபொருள் கொடுப்பனவு உட்பட அவர்கள் பெறுகின்ற பல்வேறு கொடுப்பனவுகளின் அடிப்படையில் வேறுபடுகிறது. அடிப்படைச் சம்பளத்துடன் இந்த கொடுப்பனவுகளையும் சேர்த்த தொகையில் இருந்தே உழைக்கும்போதே செலுத்தும் வரி கழிக்கப்படுகிறது.

கழிக்கப்படுகின்ற அண்ணளவான வரியை அடிப்படையாகக் கொண்டு ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மாதச் சம்பளத்தை எம்மால் கணிப்பிடமுடியும்.உதாரணமாக மாதாந்தம் சுமார் 100,000 ரூபா வரியாக கழிக்கப்படுகின்றது என்று வைத்துக்கொள்வோம்.( சம்பள அடிப்படையில் வருமானவரி கழிப்புகள் தொடர்பான அறிக்கையில் குறிப்பிட்டவாறு ) மொத்தத்தொகை 173, 500 ரூபாவை எட்டுவதற்கு 73,000 ரூபாவைக் கூட்டவேண்டும். இந்த தொகையை 36 ஆல் வகுத்து 100 ஆல் பெருக்கினால் அண்ணளவான மொத்தச் சம்பளத்தை தெரிந்துகொள்ளலாம். ஆனால் ஒவ்வொரு அமைச்சரும் பெறுகின்ற வேறுபடுகின்ற கொடுப்பனவுகளின் அடிப்படையில் இந்த தொகை வேறுபடலாம்.

2023 ஜனவரியில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது சம்பளத்தில் இருந்து வரியாக 76,566 ரூபா 72 சதத்தை செலுத்தவேண்டியிருந்தது. அந்த தொகையுடன் 73,500 ரூபாவை சேர்த்தால் 150, 066 ரூபா 72 சதமாகிறது. இந்த தொகையை 36 ஆல் வகுத்து 100 ஆல் பெருக்கினால் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் சம்பளத்தை நாம் அறிந்துகொள்ளலாம். அதன்படி அவரின் சம்பளம் 416,852 ரூபாவாகும்.

வருமான வரியாக 100,000 ரூபாவை செலுத்துகின்ற அமைச்சர் ஒருவரின் சம்பளத்தை அறிய அதனுடன் 73,500 ரூபாவை சேர்க்கவேண்டும். பிறகு அதை 36 ஆல் வகுத்து 100 ஆல் பெருக்கினால் 426,388 ரூபா 88 சதம் வரும். அதுவே அவர் பெறும் மொத்தச் சம்பளம். 85,000 ரூபாவை வருமான வரியாக செலுத்தும் ஒரு அமைச்சரின் சம்பளத்தை இந்த முறையைப் பயன்படுத்தி அறிந்துகொள்ளமுடியும். அதாவது 85,000 ரூபாவுடன் 73,500 ரூபாவை சேர்த்தால் வருகின்ற தொகையை 36 ஆல் வகுத்து 100 ஆல் பெருக்கினால் 440,277 ரூபா 77 சதம் வரும்.

அரசாங்க ஊழியர்களோ அல்லது தனியார்துறை ஊழியர்களோ தங்களது 60 வருட சேவை பூராவும் இத்தகைய எந்த வரப்பிரசாதங்களையும் பெறுவதில்லை. அதேவேளை தங்களது ஐந்து வருட பதவிக்காலத்தில் அமைச்சர்கள் இவற்றையெல்லாம் பெறுகிறார்கள். (டெயிலி மிரர் ) ●

# உலக சுகாதார தினம்

## யாழ். ஆரோக்கிய நகர செயல்திட்டம் ஆகியவை மீதான ஒரு பார்வை!

**பேராசிரியர் இ. சுரேந்திரகுமாரன்**
பீடாதிபதி, மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

**உலக சுகாதார தினம் இன்றாகும். இதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

உலக சுகாதார தினமானது ஒவ்வோர் ஆண்டும் உலக சுகாதார ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட தினமான ஏப்ரல் 7 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த தினமானது அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு நிறுவனமாகும். இது உலகின் பொது சுகாதாரத்தில் கவனம் செலுத்தும் ஒன்றாகும். உலக சுகாதார தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்படுகின்றது. இக் கருப்பொருளானது பிரதானமாக தற்காலத்தில் உள்ள சுகாதார பிரச்னைக் கான ஒரு கவனத்தையும் விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதை கொண்டிருக்கும். அந்த வகையில் இந்த வருடம் “அனைவருக்கும் சுகாதாரம்“ என்ற கருப்பொருளினை மையமாக கொண்டுள்ளது .

ஒரு நாட்டின் சுகாதாரத்துக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தி வருகின்றன. அந்த நாட்டில் உள்ள நகரங்கள் பொதுவாக முக்கிய பங்கை வகித்துவருகின்றன. குறிப்பாக, இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நகரங்கள் ஒரு முக்கிய பங்காகும். ஏனெனில், அதிகரித்து வரும் சனத்தொகை மற்றும் வளர்ச்சி அடைந்துவரும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பன முறையான சுகாதாரத்தை அணுகுவதற்கு தடையாக இருக்கின்றது.

உலக சுகாதார ஸ்தாபனமானது பல தசாப்தங்களாக ஆரோக்கிய நகரங்களை உருவாக்குவதில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில், உலக சுகாதார ஸ்தாபனதின் ஆரோக்கிய நகர திட்டம் என்பது குறிப்பிடதக்க ஒன்றாகும். ஆரோக்கிய நகரம் என்பது பௌதிக மற்றும் சமூக சூழலை மேம்படுத்தி கொள்வதோடு அங்கு வாழும் மக்கள் தமது திறன்களை




வளர்த்துக்கொண்டு ஓர் ஆரோக்கியம் மிக்க வாழ்க்கையை தாமாக ஏற்படுத்தி கொள்வதற்கு வழிப்படுத்துவதாகும்.

இச்செயல்திட்டமானது பல்வேறு நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு கணிசமான ஆரோக்கிய நகரங்களை அடையாளப்படுத்தியுள்ளது.

இச்செயல்திட்டமானது யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்தின் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவ அலகின் நேரடி ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலில் யாழ். மாநகர சபை, சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ். மாவட்ட செயலகம், யாழ். பிரதேச செயலகம், மாகாண கல்வி திணைக்களம் , மேலும் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதான ஒத்துழைப்புடன் “யாழ். ஆரோக்கிய நகர திட்டம்” நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இத் திட்டமானது 5 பிரதானமாக கருப்பொருட்க ளான கழிவு முகாமைத்துவ மேம்பாடு, போசாக்கான உணவு மேம்பாடு, உடல் மற்றும் உள ஆரோக்கிய மேம்பாடு, நீர் மற்றும் சுகாதார மேம்பாடு அத்துடன், தொற்றா நோய்களுக்கான தடுப்பு என்பவற்றை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகின்றது .

இது 3 சுற்று சூழல்களான பாடசாலை, பொது இடங்கள், அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் என்ப வற்றில் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. அந்த வகையில் பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவ சுகாதார மேம்பாட்டுக்கு பிளாஸ்ரிக் பாவனை அற்ற பாடசாலையை உருவாக்குவதற்க்காக பயிற்சி பட்டறைகளை இந்தத் திட்டம் மேற்கொண்டு வருகின்றது. யாழ். மாநகர சபைக்குள் அடங்கும் 23 பாடசாலைகளில் எமது பயிற்சிகளை நடத்தியுள்ளோம். மேலும் நீர் மற்றும் சுகாதார மேம்பாட்டின் கீழ் பாடசாலைகளில் மாணவிகளுக்கான மாதவிடாய் சுகாதாரம் எனும் பயிற்சி பட்டறையை வழங்கி வருகின்றோம்.

மேலும், சில அது தொடர்பான கற்றல் புத்தகங்களை உருவாக்கி விநியோகித்து வருகின்றோம் . உடல், உள ஆரோக்கிய மேம்பாட்டிற்காக பாடசாலை மாணவர் கள் மத்தியில் சைக்கிள் பாவனையை அதிகரிப்பதற்காக கடந்த வருடம் சைக்கிள் விழிப்புணர்வு பயணம் ஒன்றை நடத்தி தொடர்ந்து அதனை மேம்படுத்துவதற்காக மாணவர்கள் சைக்கிளில் பயணிப்பதற்கான சூழலை உருவாக்குவதில் ஆர்வமாக செயல்பட்டு வருகின்றோம்.

மேலும், பாடசாலை தோட்டம் என்ற எண்ணக்கரு ஊடாக செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். பாடசாலையில் மாணவர்களின் போசணையை அதிகரித்து கொள்ள சுகாதாரமான சிற்றுண்டி சாலை களை உருவாக்குவதற்கு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

இவ்வாறு நாம் எமது ஆரம்ப கட்ட நடவடிக்கை களை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தி வருகின் றோம். எமது இச் செயற்பாடுகளை அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் மேற்கொள்வதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றோம் .

நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுவதன் மூலம் மட்டுமே எமது நகரை ஆரோக்கியம் மிக்க நகராக மாற்ற முடியும். நாம் ஒவ்வொருவரும் - எமது நகரை ஆரோக்கியத்தின் பாதையில் கொண்டு செல்வ தற்கான சிறிய முயற்சி எமது நகரத்தின் ஆரோக்கியமான பயணத்துக்கு வழிவகுக்கும்.

ஆரோக்கியமான மக்கள் - ஆரோக்கியமான நகரம் - ஆரோக்கியமான நாடு!






# மட்டக்களப்பில் இலவச உரத்தை 40 வீதமானோரே பெற்றுள்ளனர்!

**மாவட்ட அரச அதிபர் கலாமதி தகவல்**

மட்டக்களப்பு, ஏப். 07

**விவசாய அமைச்சினால் விவசாயிகளுக்கு இலவமாக வழங்கப்படும் ரிஎஸ்பி உரத்தினை, மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளில் 40 வீதமானோரே பெற்றுக்கொண்டுள்ளனர் என மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.**

எதிர்வரும் 10ஆம் திகதியுடன் இந்த இலவச உர விநியோகம் நிறுத்தப்படவுள்ள நிலையில், இதுவரை உரத்தைப் பெற்றுக்கொள்ளாதாக ஏனைய விவசாயிகள் விரைவாக உரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

அத்தோடு இலவச டீசல் விநியோகத்திற்கான காலம் நிறைவடைந்தபோதும், மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி, எதிர்வரும் 14ஆம் திகதி வரை இலவச டீசல் விநியோகம் இடம்பெறும் என்றும், இலவச டீசலையும் 50 வீதமானவர்களே இதுவரை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா குறிப்பிட்டார். (அ)



# வெள்ளரிப்பழ விற்பனை அம்பாறையில் அமோகம்

அக்கரைப்பற்று, ஏப். 07

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக கரையோரப் பகுதிகளில் பிரதான வீதியோரங்களில் அங்காங்கே வெள்ளரிப்பழ விற்பனை அதிகரித்துள்ளன.

குறிப்பாக சம்மாந்துறை -அம்பாறை பிரதான வீதி, கல்முனை- அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களில் சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஓட்டோக்களில் வெள்ளரிப்பழத்தை வியாபாரிகள் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

பொதுமக்கள் ஆர்வத்துடன் வெள்ளரிப்பழக் கொள்வனவில் ஈடுபடுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

தற்போது நிலவி வருகின்ற வரட்சியான காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடல் உஷ்ணத்தை தணிப்பதற்காக வெள்ளரிப்பழம் உட்பட ஏனைய பழ வகைகளைச் சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

இது தவிர தற்போது அதிக வெப்பம் காரணமாக



அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரிப்பழத்துக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. 150 ரூபாய் முதல் சுமார் 850 ரூபாய் வரை வெள்ளரிப்பழம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம், செங்கலடி, களுதாவளை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பெருமளவில் வெள்ளரிப் பயிர்ச்செய்கை பண்ணப்பட்டு வருவதுடன் இவைகள் ஏனைய ஊர்களுக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லப் படுகின்றன. (அ)

# அரசுக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்!

அம்பாறை, ஏப். 07

நீர் மற்றும் மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிராக அம்பாறை கொனகொல்ல சந்தியில் தேசிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பணி இடைநிறுத்தப்பட்டவர் அம்பாறை வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 26ஆம் திகதி கொனகொல்ல சந்தியில் அரசாங்கத்துக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிவில் உடை அணிந்து விடுமுறை அறிவித்தலின்றி கலந்துகொண்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட்ட நிலையில் கடந்த புதன்கிழமை முதல் அவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார். (அ)

# ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்த முன்வருவோம்

**இலங்கை ஜனநாயக முன்னணி அழைப்பு**



நிந்தவூர், ஏப். 07

தற்போது நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரே ஒரு தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்த பொருளாதார நிபுணர்களும் நாட்டு மக்களும் முன்வரவேண்டும் என இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் அல் ஹாஜ் ஏ.பி. கமால்தீன் கூறினார்.

ஜனாதிபதியின் நல்ல செயல் திட்டங்களுக்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் தங்கள் சுய இலாபங்களுக்கு சோரம் போகாது நாட்டின் முன்னேற்றத்திலும், மக்களின் துயரத்திலும் பங்குகொள்ளவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை ஜனநாயக முன்னணியின் உயர் சபைக் கூட்டம், அட்டாளைச்சேனையிலுள்ள அதன் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்றபோது, கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - 2020ஆம் ஆண்டில் உலகத்தை ஆட்டிப்படைத்த கொடிய நோயான கோவிட்-19 காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியைக் கண்டது. இதன் காரணமாக 67 இலட்சம் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியையும் மற்றும் பிரதமரையும் பதவியிறக்கம் செய்தமை இலங்கை வரலாற்றில் என்றுமே நடைபெறாத ஒரு விடயமாகும்.

கடந்த 30 வருட கால யுத்தம், பின்பு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம், அதன் பின்னர் 2020ம் ஆண்டு ஏற்பட்ட கோவிட்-19 மற்றும் 2022 இல் ஏற்பட்ட அரசுக்கெதிரான கிளர்ச்சி காரணமாக ஜனாதிபதியினதும், பிரதமரினதும் பதவி விலகலோடு இலங்கையின் பொருளாதாரம் முடக்கப்பட்டதோடு சர்வதேச சமூகம் இலங்கைக்கு எந்தவொரு உதவியையும் செய்வதற்கு முன்வரவில்லை. இதனால் நாட்டின் பொருளாதாரம், மக்களின் வாழ்வாதாரம் மேலும் பாரிய பின்னடைவை அடைந்துகொண்டிருந்த இக்கட்டான நிலைமையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தை தைரியத்தோடு பொறுப்பேற்றதோடு சர்வதேச சமூகம், உலக வங்கி, உலக சுகாதார நிறுவனம், சர்வதேச நாணய நிதியம், மனித உரிமை அமைப்புக்களின் பேரவை போன்றவற்றின் உதவியை நாடியதன் விளைவாக நாடு இன்று படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகிறது. இவற்றுக்கு முற்றுமுழுதான காரணம் தற்போதைய ஜனாதிபதியாகும். இதனை இந்நாட்டு மக்களும் அரசியல் தலைமைத்துவங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்-என்றார். (அ-06)

# கோர விபத்தில் இளைஞர் சம்பவ இடத்திலேயே பலி!

மட்டக்களப்பு, ஏப். 07

மட்டக்களப்பு - ஏறாவூர், கொம்மாந்துறை பகுதியில் பிற்பகல் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், சிறுவன் உட்பட 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்தில் செங்கலடி - ஐயங்கேணி பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய க.திபாகர் என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

21 வயதுடைய இளைஞன் ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், 10 வயதுச் சிறுவன் அடங்கலாக 4 பேர் செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

செங்கலடிப் பகுதியில் இருந்து கொம்மாந்துறை பகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் எதிரே வந்த மூன்று மோட்டார் சைக்கிள்கள் மீது தொடராக மோதியுள்ளனர்.

இதன்போது சம்பவ இடத்திலேயே மோட்டார் சைக்கிளில் வந்த 28 வயதான இளைஞன் உயிரிழந்ததுடன் ஏனையவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். (அ)

# மட்டக்களப்பு வைத்தியசாலையில் இரத்தத்துக்கு பெரும் தட்டுப்பாடு!

மட்டக்களப்பு, ஏப். 07

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்தவங்கியில் இரத்தத்திற்குத் தட்டுப்பாடு நிலவுவதால் குருதிக் கொடையாளிகள் விரைந்து இரத்ததானம் செய்யுமாறு வைத்தியாலை இரத்த வங்கிப் பிரிவின் வைத்திய அதிகாரி கீர்த்திகா மதனழகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் எல்லா வகையான இரத்தத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, உயிர் காக்கும் உன்னத சேவையை மேற்கொள்ள குருதிக் கொடையாளர்களின் மகத்தான கொடை தேவைப்படுகிறது.

இரத்த தானம் செய்ய உத்தேசித்துள்ளவர்கள் உடனடியாக வந்து உதவவேண்டும் என அவர் மேலும் கூறியுள்ளார். (அ)



# கல்முனை பஹ்ரியாவின் பவளவிழா தொடக்கிவைப்பு

அக்கரைப்பற்று, ஏப். 07

கல்முனை கல்வி வலய கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய பவளவிழா நிகழ்வுகளை உத்தியோகபூர்வமாக தொடக்கி வைக்கும் நிகழ்வும், இப்தார் வைபவமும் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைஸால் தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது.

நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை உத்தியோகபூர்வ பவளவிழா இலட்சினையை திறந்து வைக்கப்பட்டது.

இவ்வருடம் முழுவதுமாக நோன்புப்பெருநாளை அடுத்து இரத்த தான முகாம்கள், பழைய மாணவர்களின் அணிகள் பங்கு கொள்ளும் கிரிக்கட் சுற்றுப் போட்டி, கலை, கலாசார நிகழ்வுகள், பிரமாண்ட பரிசளிப்பு, மேலங்கி அறிமுகம், சாதனையாளர் கௌரவிப்பு, பெண் பழைய மாணவிகளின் நிகழ்வுகள் என பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்களான எம்.ஏ. அஸ்தர், ஏ.எஸ். சலாம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் எஸ்.எல். ஹமீட், பழைய மாணவர் அமைப்பின் செயலாளர் எம்.ஐ.எம். ஜிப்ரி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள் எனபலரும் கலந்து கொண்டனர். (அ)

# அமெரிக்க ஆதரவின்றி ஈரானை தாக்க தயார்!

## இஸ்ரேல் பாதுகாப்பு தலைமை அதிகாரி

ஜெருசலேம், ஏப். 07

ஈரானைத் தாக்குவதற்கு தாம் தயாராக இருப்பதாக இஸ்ரேல் பாதுகாப்பு தலைமை அதிகாரி ஹெர்சி ஹலேவி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஆதரவு இல்லாமல் கூட அவ்வாறு செய்ய முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

ஈரானுக்கு எதிராக செயல்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். இஸ்ரேலிய இராணுவம் தொலைதூர நாடுகளிலும் நாட்டுக்கு அருகாமையிலும் தாக்கும் திறனைக் கொண்டுள்ளது என ஹலேவி கூறினார்.

அடுத்த சில ஆண்டுகளில் ஈரான் மீதான முன்கூட்டிய தாக்குதலுக்கு இஸ்ரேலிய பாதுகாப்புத்துறை அதன் திறன்களை மேம்படுத்தும் என்றும், புவியியல் தூரம் இருந்தபோதிலும் அத்தகைய தாக்குதலின் தீவிரம் அதிகமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

“எங்களுக்குத் தனியாகச் செயல்படத் தெரியும். நாம் ஒரு இறையாண்மையுள்ள தேசம், அதன் சொந்த முடிவுகளை எடுக்கும் உரிமையைக் கொண்டுள்ளது. அமெரிக்கா எங்கள் பக்கம் இருப்பது நல்லது, ஆனால் அது ஒரு கடமை அல்ல, ”என்று அவர் மேலும் கூறினார்.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும்



இடையே அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன. கடந்த வாரம் சிரியாவில் தனது இரண்டு இராணுவ வீரர்களை இஸ்ரேல் கொன்றதாக ஈரான் குற்றம் சாட்டியதோடு பதிலடி கொடுப்பதாக உறுதியளித்தது.

ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்கும் முயற்சிகளை தொடர்வதாக இஸ்ரேல் குற்றம் சாட்டுகிறது, ஆனால் ஈரான் மறுக்கிறது. ஈரானின் அணு சக்தித் திட்டத்தைக் கட்டுப்படுத்த இராஜதந்திர முயற்சிகள் தோல்வியுற்றால், இராணுவ நடவடிக்கையை நாடுவோம் என்று இஸ்ரேல் முன்னதாக எச்சரித்திருந்தது.

இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே ஒரு அரிய பொது கருத்து வேறுபாடு அண்மையில் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி ஜோ பிடன் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவை நீதித் துறையை பலவீனப்படுத்தும் முயற்சியில் இருந்து பின்வாங்குமாறு அழைப்பு விடுத்தார். இது இஸ்ரேலில் பாரிய எதிர்ப்புகளைத் தூண்டியுள்ளது.

நெத்தன்யாகு, வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை என்று பதிலளித்தார். ஆனால் பிடன் அழைத்த ஜனநாயக உச்சிமாநாட்டில் அவர் பங்கேற்றபோது மிகவும் இணக்கமான தொனியை எடுத்தார்.

அந்த பரிமாற்றத்தைத் தொடர்ந்து, அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் அன்ரனி பிளிங்கன் தனது இஸ்ரேலிய பிரதிநிதி எலி கோஹனை அழைத்து, “நிலையான அமெரிக்க - இஸ்ரேல் இருதரப்பு உறவின் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தினார்” என்று வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் வேதாந்த் படேல் தெரிவித்தார். (அ)



# திரைத்துறையில் கால்பதிக்கும் பராக் ஒபாமாவின் மூத்த மகள்

நியூயோர்க், ஏப். 07

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவின் மூத்த மகள் மாலியா ஒபாமா திரைத்துறையில் விரைவில் கால்பதிக்க உள்ளார்.

டொனால்ட் குரோவர் தயாரிக்கும் குறும்படத்தை மாலியா ஒபாமா விரைவில் இயக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

மாலியா ஒபாமா தனது சொந்த தயாரிப்பு நிறுவனத்தால் தயாரிக்கப்படவுள்ள ஒரு குறும்படத்தில், முதல் முறையாக இயக்குநராக தனது பணியை தொடங்க உள்ளதாக டொனால்ட் குளோவர் சமீபத்தில் தெரிவித்தார்.

டொனால்ட் க்ளோவர் மற்றும் மாலியா ஒபாமா ஆகியோர் ஏற்கனவே, தொலைக்காட்சி தொடரில் பணி புரிந்துள்ளனர்.

மாலியா ஒபாமா ஹவார்ட் பல்கலைக்கழக பட்டதாரி. அவர் லீனா டன்ஹாமின் பெண்களுக்கான பயிற்சியாளராக பணியாற்றினார். அதைத் தொடர்ந்து, வெய்ன்ஸ்ரின் நிறுவனத்தில் ஹாலி பேரி நடித்த அறிவியல் புனைக்கதை நாடகத் தொடரான எக்ஸ்ரென்ற் இல் தயாரிப்பு உதவியாளராக பணியாற்றியுள்ளார். (அ)

# ஈரான்- சவுதி வெளியுறவு அமைச்சர்கள் 7 ஆண்டுகளில் முதல்முறையாக சந்திப்பு!


பீஜிங், ஏப். 07

ஈரானும் சவுதி அரேபியாவும் இராஜதந்திர உறவுகளை மீட்டெடுக்க ஒப்புக்கொண்டதன் பின்னர், இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் ஏழு ஆண்டுகளில் முதல்முறையாக பீஜிங்கில் சந்தித்துக்கொண்டனர்.

உயர்மட்ட தூதர்களின் முதல் முறையான சந்திப்பில், இளவரசர் பைசல் பின் பர்ஹான் மற்றும் ஈரானியப் பிரதமர் ஹொசைன் அமீர்-அப்துல்லாஹியன், பாரம்பரிய சீன ஓவியம் மற்றும் கொடிகளுக்கு முன்னால் கைகுலுக்கி புன்னகைப்பதைக் காட்டும் புகைப்படம் வெளியாகியுள்ளது.

பின்னர் அவர்கள் ஒரு சந்திப்பு அறைக்குச் சென்று இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தனர்.

இச்சந்திப்பின் போது முக்கியமாக, இருவரும் தங்கள் தூதரகங்கள் மற்றும் தூதரகங்களை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதித்ததாக தெரிவிக்கப்பட்டுள்



ளது. வளைகுடா பிராந்தியத்தில் பதற்றமான சூழ்நிலைக்கு காரணமான ஈரானும் சவுதி அரேபியாவும் யேமனில் இருந்து சிரியா வரை மோதல்களை ஆழப்படுத்திய பல வருட இடைவெளிக்குப் பிறகு இரண்டு மாதங்களுக்குள் உறவுகளை மீட்டெடுக்கவும், தூதரக பணிகளை மீண்டும் திறக்கவும் மார்ச் மாதம் ஒப்புக்கொண்டுள்ளன.

மத்திய கிழக்கின் சமீபகால வரலாறு இரு நாடுகளுக்கும் இடையிலான பகைமையால் ஆதிக்கம் செலுத்துகிறது. பிராந்தியத்தின் புவிசார் அரசியலை மறுவடிவமைக்கக்கூடிய முன்னெடுப்புக்கு இடைத்தரகாக சீனா செயற்பட்டது.

சவுதி ஒரு முக்கிய ஷியா முஸ்லீம் மதகுருவை தூக்கிலிட்டதைத் தொடர்ந்து ஈரானில் உள்ள அதன் தூதரகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கியதை அடுத்து, ஜனவரி 2016 இல் சவுதி அரேபியா உறவுகளை துண்டித்தது.

சன்னி மற்றும் ஷியா தலைமையிலான அண்டை நாடுகளுக்கு இடையே அடிக்கடி பதற்றம் இருந்து வருகிறது. அவர்கள் ஒருவரையொருவர் பிராந்திய மேலாதிக்கத்தை தேடும் ஒரு அச்சுறுத்தும் சக்தியாக கருதுகின்றனர்.



# தாய்வானுக்கான ஆயுத விற்பனை தொடர வேண்டும்!

## அமெரிக்க சபாநாயகர்

நியூயோர்க், ஏப். 07

தாய்வானுக்கான ஆயுத விற்பனை தொடர வேண்டும் என அமெரிக்க சபாநாயகர் கெவின் மெக்கார்த்தி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சாய் நியூயோர்க்கில் தலைமைத்துவ விருதுடன் கௌரவிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு நேற்று முன்தினம் கலிபோர்னியாவில் தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென்னை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனிடையே தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் மற்றும் அமெரிக்க சபாநாயகர் கெவின் மெக்கார்த்தி இடையேயான சந்திப்புக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சீனா, இராணுவ பயிற்சியை ஆரம்பித்துள்ளது.

மேலும், இச்சம்பவத்துக்கு உறுதியான பதிலடி என்று உறுதியளித்த சீனா, சுயராஜ்ய தீவைச் சுற்றியுள்ள கடற்பகுதிக்கு போர்க்கப்பல்களை அனுப்பியது. (அ)

# நடுவானில் தன் இருக்கைக்கு கீழ் நாகபாம்பை கண்டார் விமானி!

கேப்டவுன், ஏப். 07

தென்னாபிரிக்காவை சேர்ந்த விமானியான ருடால்ப் எராஸ்மஸ் என்பவர், நான்கு பயணிகளுடன் ஒரு சிறிய விமானத்தில் வொர்செஸ்டரில் இருந்து நெல்ஸ்ப்ரூட் வரை சென்று கொண்டிருந்தார்.

நடுவானில் 11 ஆயிரம் அடி உயரத்தில் விமானம் சென்று கொண்டிருந்தபோது, அவரின் இருக்கைக்கு அடியில் ஒரு நாகபாம்பு இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்த அவர், பதற்றம் கொள்ளாமல் விமானத்தைச் சீராக இயக்கியுள்ளார்.

அத்துடன், சக பயணிகளிடம் விமானத்தின் உள்ளே பாம்பு உள்ளது. அது என் இருக்கைக்கு அடியில் இருப்பதை உணர்ந்தேன். எனவே விமானத்தை விரைவில் தரையிறக்கவேண்டும் என கூறினார்.

பின்னர் அவர் ஜோகன்னஸ்பேர்க்கில் உள்ள கட்டுப்பாட்டு மையத்துடன் தொடர்பு கொண்டு சூழ் நிலையை விளக்கி விமானத்தை அவசரமாக தரையிறக்கினார் தன்னுயிரையும் பொருட்படுத்தாமல் சக பயணிகளை காப்பாற்றிய விமானியை பலரும் வெகுவாக பாராட்டி வருகின்றனர். (அ)

## ஐ. பி. எல். இருபது - 20:
# பரபரப்பான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வெற்றி!

குவாஹாட்டி, ஏப். 07

பரபரப்பை ஏற்படுத்திய போட்டியில் 5 ஓட்டங்களால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வெற்றி கொண்டது பஞ்சாப் கிங்ஸ்.

அணித் தலைவர் ஷிகர் தவான், பிரப்சிம்ரன் சிங் ஆகியோரின் அரைச்சதங்களும், நெதன் எலிஸ் கைப்பற்றிய 4 விக்கெட்களும் பஞ்சாப்பின் வெற்றிக்கு முக்கிய காரணங்களாகின.

பஞ்சாப் கிங்ஸ் நிர்ணயித்த 98 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 192 ஓட்டங்களை பெற்று 5 ஓட்டங்களால் தோல்விடைந்தது.

அஸ்வினை தொடக்க வீரராகக் களமிறக்கிய பரீட்சார்த்த முயற்சி அந்த அணிக்கு பலனளிக்கவில்லை. மற்றைய தொடக்கவீரர். யஷஸ்வி ஜெய்ஸ்வால் (11) ஆட்டம் இழந்த சொற்ப நேரத்தில் அஸ்வின் ஓட்டம் பெறாமல் வெளியேறினார்.

ஜோஸ் பட்லர் (19), சஞ்சு சாம்சன் (42), தேவ்தத் படிக்கல் (21), ரியான் பராக் (20) என ஓட்டங்களை எடுத்தபோதும் அவை அணியை வெற்றியை நோக்கி நகர்த்தவில்லை.

எனினும் பின்னர் வந்த, ஷிம்ரன் ஹெட்மேயரும் துருவ் ஜூரெலும் 7ஆவது விக்கெட்டுக்காக அதிரடியாக ஓட்டங்களை குவித்தனர். 27 ஓட்டங்களில் அவர்கள் 54 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆனால், கடைசி ஓவரின் 3ஆவது பந்தில் அவசரப்பட்டு ஓட்டம் எடுக்க முயன்று ஹெட்மேயர் அநாவசியமாக ரன் அவுட் ஆனார். அவர், 18 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 18 ஓட்டங்களைப் பெற்றார். துருவ் ஜூரெல் 15 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 32 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் நெதன் எலிஸ் 4 விக்கெட்களையும் அர்ஷ்தீப் சிங் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 197 ஓட்டங்களைக் குவித்தது.

பிரப்சிம்ரன் சிங், அணித் தலைவர் ஷிகர் தவான் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 58 பந்துகளில் 90 ஓட்டங்களைக் குவித்து சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினர். பிரப்சிம்ரன் சிங் 34 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 60 ஓட்டங்களைக் குவித்தார்.

அவர் ஆட்டமிழந்த சொற்ப நேரத்தில் பானுக ராஜபக்ஷ வலது கையில் காயமடைந்த நிலையில் ஓய்வுபெற்றார். ரவிச்சந்திரன் அஷ்வினின் பந்தை ஷிகர் தவான் விசுக்கி அடிக்க அந்தப் பந்து நேராக பானுக ராஜபக்ஷவின் வலது முழங்கைப் பகுதியைப் பதம்பார்த்தது.



இதனால், காயமடைந்த அவர் வலியால் தொடர்ந்து விளையாட முடியாமல் மைதானத்திலிருந்து வெளியேறினார்.

தொடர்ந்து ஷிகர் தவானும் ஜிதேஷ் ஷர்மாவும் 2ஆவது விக்கெட்டில் 66 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ஜிதேஷ் ஷர்மா 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சொற்ப நேரத்தில் சிகந்தர் ரஸா ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார்.

மறுபக்கத்தில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய ஷிகர் தவான் 56 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 86 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

அவர் ஷாருக் கானுடன் 4ஆவது விக்கெட்டில் 37 ஓட்டங்களைப் பகிர்ந்தார். ஷாருக் கான் 11 ஓட்டங்களைப் பெற்றார்.

ராஜஸ்தானின் பந்துவீச்சில் ஜேசன் ஹோல்டர் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ஐ)



## எப்படி விளையாடுவது என்பதை குஜராத் அணியிடம் கற்றுள்ளோம்!
### டேவிட் வோர்னர்

டில்லி, ஏப். 07

குஜராத் அணியினர் சூழ்நிலையை எவ்வாறு தகவமைத்துக் கொண்டு விளையாட வேண்டும் என்பதை எங்களுக்கு காட்டினர். இது எங்களுக்கு சிறந்த பாடம் என்று கூறியுள்ளார் டேவிட் வோர்னர்.

டேவிட் வோர்னர் தலைமையிலான டில்லி கப்பிட்டல்ஸ் அணி தொடர்ச்சியாக இரண்டு தோல்விகளை சந்தித்துள்ளது. அந்த அணி முதல் ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியிடம் வீழ்ந்திருந்தது. குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்துக்கு பின்னர் டேவிட் வோர்னர் கூறியதாவது.

ஆடுகளத்தில் பந்துகள் நான் எதிர்பார்த்ததை விட அதிகம் ஸ்விங் ஆனது. பவர்பிளேவில் விக்கெட்களை இழந்தால் சிரமமாக இருக்கும். குஜராத் அணியினர் சூழ்நிலையை எவ்வாறு தகவமைத்துக் கொண்டு விளையாட வேண்டும் என்பதை எங்களுக்கு காட்டினர். இது எங்களுக்கு சிறந்த பாடம். சொந்த மைதானத்தில் இன்னும் 6 ஆட்டங்களில் விளையாட உள்ளோம். அதில் சிறப்பாக செயல்பட முயற்சிப்போம். குஜராத் வீரர்கள் சிறப்பாக பந்து வீசினார்கள். ஆடுகளம் மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டுதான் அக்சர் படேலை பந்து வீச்சில் பயன்படுத்தவில்லை - என்றார். (ஐ)

## பிரெஞ்சு ஓப்பன் தொடரில் நடால்ஆடுவதுசந்தேகமே?



மட்ரிட், ஏப். 07

நடப்பு சம்பியனான ரபேல் நடால் காயம் காரணமாக அடுத்த வாரம் நடைபெறவுள்ள மன்டே கார்லோ மாஸ்ரர்ஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார். இந்த நிலையில், பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லம் தொடரிலும் அவர் விளையாடுவது சந்தேகமே.

ஸ்பெயின் நாட்டவரான நடால் மன்டே கார்லோ மாஸ்ரர்ஸ் தொடரை 11 முறை கைப்பற்றியுள்ளார். இவர் கடந்த ஜனவரி மாதம் ஆஸி ஓப்பன் தொடரில் காயமடைந்தார். காயத்திலிருந்து குணமடைய 6 - 8 வாரங்களாகும் என்ற நிலையில், அவர் இன்னமும் குணமடையவில்லை. இந்த நிலையிலேயே அவர் இந்தத் தொடரிலிருந்து விலகியுள்ளார்.



## உலகக் கிண்ணத் தொடரை தவறவிடும் வில்லியம்சன்?

வெலிங்டன், ஏப். 07

நடப்பு ஐ. பி. எல். தொடரின் முதல் போட்டியில் விளையாடிய போது நியூசிலாந்து வீரர் கேன் வில்லியம்சன் காயமடைந்தார். இந்த சூழலில் எதிர்வரும் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரை அவர் தவறவிடுவார் என்று கூறப்படுகின்றது.

அவருக்கு வலது கால் மூட்டுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. இதனை நியூசிலாந்து கிரிக்கெட் உறுதி செய்துள்ளது.

இவருக்கு அடுத்த மூன்று வார காலத்துக்குள் சத்திர சிகிச்சை செய்யப்படவுள்ளது. இதனால், காயத்திலிருந்து மீண்டு உலகக் கிண்ணத் தொடரை வழிநடத்தும் உடல்தகுதியை அவர் கொண்டிருப்பாரா என்று சந்தேகம் எழுந்துள்ளது.

எனினும், அவர் விரைந்து களம் திரும்ப முயற்சிப்பேன் என்று கூறியுள்ளார். (ஐ)

## டோனிக்கு எம். சி. சி. கௌரவம்!

லண்டன், ஏப். 07

எம். சி. சி. கழகம் டோனி, ரெய்னா உட்பட 19 பேருக்கு கௌரவம் அளித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் போட்டி விதிமுறைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் மேரிலிபோன் கிரிக்கெட் கழகம் (எம்.சி.சி.) லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் செயல்பட்டு வருகிறது. பழம் பெருமை வாய்ந்த இந்த கழகம் புதிதாக 19 வீரர், வீராங்கனைகளுக்கு ஆயுள் உறுப்பினர் கௌரவம் வழங்கி இருக்கிறது.

இதில் இந்திய முன்னாள் அணித் தலைவர் டோனி, யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, இந்திய பெண்கள் அணியின் முன்னாள் கேப்டன் மிதாலி ராஜ், முன்னாள் வீராங்கனை ஜூலன் கோஸ்வாமி ஆகியோரும் அடங்குவார்கள். (ஐ)



# வெகுவிரைவில் இலங்கை பொருளாதார மீட்சி பெறும்

## இந்திய பிரதித் தூதுவர் நம்பிக்கை

**கொழும்பு, ஏப். 06**

**இலங்கை வெகுவிரைவில் பொருளாதார மீட்சியினை எட்டும் என இலங்கைக்கான இந்திய பிரதி தூதுவர் வினோத் கே ஜேக்கப் தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர் ஒருங்கிணைப்பு மன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது திறைசேரியின் அபிவிருத்திப் பங்காளர் ஒருங்கிணைப்பு மன்ற இம்முயற்சியைப் பாராட்டிய பிரதி தூதுவர்,

இவ்வாறான அமர்வுகளை 6 மாதங்களுக்கு ஒரு தடவை ஒழுங்கமைக்கவேண்டுமென்ற முன்மொழிவுக்கு தனது ஆதரவையும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் சர்வதேச



நாணய நிதியம் குறித்த விவகாரங்களில் இலங்கை மக்களுக்காக இந்தியா உறுதியான ஆதரவை வழங்கியதாக தெரிவித்த அவர்,

இலங்கை வெகு விரைவில் பொருளாதார மீட்சியை எட்டும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# மதுபான நிலையங்கள் இன்று திறந்திருக்கும்

கொழும்பு, ஏப். 07

இன்று புனித வெள்ளி அரச விடுமுறை தினம் என்றபோதும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபான நிலையங்களும் திறந்திருக்கும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிங்கள இந்து புத்தாண்டுக்காக ஏப்ரல் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் மாத்திரம் மதுபான நிலையங்கள் மூடப்படும் எனவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)



# யாழில் வாகன நெரிசலைக் குறைக்க பொலிஸாரால் விசேட வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 07

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்.நகரில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகமாக உள்ளதால் நகரப் பகுதியில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் யாழ். மாநகர சபையுடன் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

போக்குவரத்து பொலிஸார் நகரப் பகுதியில் நிறுத்தப்படும் வாகனங்களை வாகனம் நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

பண்டிகைக் காலத்தை யொட்டி மக்கள் அதிகளவில் நகருக்கு வருவதால் நகரில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரைஸ் குக்கரின் மூடியை பாவித்து மகளின் முகத்தில் சுட்டார் தந்தை!

கொழும்பு, ஏப். 07

16 வயதுடைய மகளின் முகத்தில் ரைஸ் குக்கரின் மூடியால் தந்தையொருவர் சுட்ட சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பின்வத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

பின்வத்தை வடுபாசல் தோட்டம் பிரதேசத்தில் வசிக்கும் சிறுமி ஒருவர் தனது தாயுடன் சென்று இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

தீக்காயங்களுடன் சிறுமி நேற்று முன்தினம் இரவு தனது தாயுடன் பொலிஸில் முறைப்பாடு செய்துவிட்டு பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அன்று இரவு சிறுமி வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தபோது, சந்தேக நபர் இரவு 7.45 மணியளவில் வீட்டுக்கு வந்துள்ளார். அப்போது, சிறுமியின் தாய் அருகில் உள்ள கடைக்கு சென்றுள்ளார்.

சந்தேகநபர் ரைஸ் குக்கரின் மூடியைத் திறந்து, "ஏன் இவ்வளவு சோறு சமைக்கிறாய்?" எனக் கூறி ரைஸ் குக்கரின் மூடியை சிறுமியின் முகத்தில் வைத்தார் என சிறுமி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முகம் மற்றும் கன்னங்களில் தீக்காயங்களுக்கு உள்ளான சிறுமி உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# 40 எரிபொருள் நிலையங்களில் விற்பனை இடைநிறுத்தப்படும்

கொழும்பு, ஏப். 07

40 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விற்பனையை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கியூ.ஆர் குறியீட்டை மீறித் தொடர்ச்சியாக எரிபொருள் விற்பனை செய்யும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விற்பனையை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்குவது தொடர்பில் அதிகாரிகளுடனான முன்



னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் அடுத்த 8 வாரங்களுக்கான எரிபொருள் இறக்குமதித் திட்டம், சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பண்டிகைக் காலத்தில் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (அ)

# துண்டாடப்பட்ட கையை வெற்றிகரமாக பொருத்தி கேகாலை வைத்தியசாலை மருத்துவர்கள் சாதனை

கொழும்பு, ஏப். 07

யுவதி ஒருவரின் துண்டான கையை 4 மணி நேர சத்திர சிகிச்சைக்கு பின்னர் வெற்றிகரமாக பொருத்தி கேகாலை வைத்தியசாலையின் மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

யுவதியின் உடலில் இருந்து துண்டான கை நேற்று முன்தினம் நள்ளிரவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் அதனை வெற்றிகரமாக இணைத்ததாக கேகாலை வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஆனந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கேகாலை எரதுபதுபிட்டிய பிரதேசத்தில் இரண்டு குடும்பத்தினருக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மோதலில் 21 வயதான யுவதியின் வலது கையின் கீழ் பகுதி துண்டாகியுள்ளது.



துண்டாகியை கை பகுதியை ஐஸ் கட்டிகள் இடப்பட்ட பையில் இட்டு, யுவதியுடன் அயல் வீட்டினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன் போது உடனடியாக செயற்பட்ட விசேட சத்திர சிகிச்சை நிபுணர் ஆனந்த ஜயவர்ன உள்ளிட்ட மருத்துவர்கள் குழு,

யுவதியின் கையை இணைக்கும் சத்திர சிகிச்சையை இரவு 9 மணியளவில் ஆரம்பித்தனர்.

சத்திர சிகிச்சைக்கு பின்னர் யுவதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவரது உடல் நிலை தேறி வருவதாக மருத்துவர் ஆனந்த ஜயவர்தன கூறியுள்ளார். (அ)

# இறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை; மாநகர சபை களப் பரிசோதனை

அக்கரைப்பற்று, ஏப். 07

கல்முனை மாநகர சபை எல்லையினுள் மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டு, அது கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் அமுல்படுத்தப்பட்டு வரும்நிலையில், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் அறிவுறுத்தலின் பேரில் களப் பரிசோதனை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இக்களப் பரிசோதனையில் மாநகர சபையின் கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ. வட்டபொல, வருமான பரிசோதகர்களான ஏ.ஜே.சமீம், எம்.சலீம், எம்.எஸ்.எம்.உபைத், பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ஏ.அஹத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் இயங்கி வருகின்ற அனைத்து இறைச்சிக் கடைகளிலும் அதிரடியாக இப்பரிசோதன மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கட்டுப்பாட்டு விலை உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டதுடன் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தப் படாத இறைச்சிக் கடைகளில் விலைப்பட்டியல் மாநகர சபை உத்தியோகத்தர்களினால் ஒட்டப்பட்டது.

அத்துடன் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தத் தவறிய வியாபாரிகளுக்கு எச்சரிக்கையுடன் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (அ)

# காணி வழக்கு விசாரணையின்போது முறைப்பாட்டாளர் திடீர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 07

களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் சிறு முறைப்பாடுகள் பிரிவில் காணி வழக்கு தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது முறைப்பாட்டாளர் திடீரென கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை தெற்கு செனவிரத்ன பிளேஸில் வசிக்கும் கஜநாயக்க முதலிகே நாலக துஷார என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த காணி தொடர்பில் உயிரிழந்தவர் களுத்துறை தெற்கு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில், அவர் திடீரென மயங்கி விழுந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

1990 சுவசெரிய அம்புலன்ஸ் ஊடாக அவர் களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதோடு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஈழநாடு
Eelanadu




# பொருளாதார மீட்சிக்கு அமெரிக்காவின் ஆதரவு

## தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 07

**இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்கத் தூதரகத்தின் முதலாவது புத்தாண்டு சந்திப்பை விளம்பரப்படுத்தும் முகமாக வெளியிட்ட ருவிட்டர் பதிவில் ஜூலி சங் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த புத்தாண்டு சந்தை, உள்ளூர் மற்றும் பெண் களுக்குச் சொந்தமான வணிகங்கள் உட்பட 40 விற்ப னையாளர்களுக்கு தங்கள் பொருட்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குகிறது.

இந்த நிலையில் உள்ளூர் வணிகங்களுக்கான வாய்ப்புகளை எளிதாக்குவது இலங்கையின் பொரு ளாதார மீட்சிக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் ஒரு வழியாகும் - என குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# இலங்கைக் கடலில் அத்துமீறிய 11 இந்திய மீனவர்கள் விடுவிப்பு

## ஒருவருக்கு சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம், ஏப். 07

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான 12 இந்திய மீனவர்களில் 11 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி எல்லை தாண்டி அனலைதீவு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர் இரு படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஆறாவது சந்தேகநபர் ஒரு வருடத்துக்கு முன் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகி நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டிருந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவருக்கு 14 மாத காலச் சிறைத்தண்டனையை விதித்து ஊர்காவற்றுறை நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட இரு படகுகளில் ஒரு படகை பறிமுதல் செய்தும் மற்றைய படகின் உரிமையாளர் இன்மையினால் அந்த படகிற்கான உரிமை கோரும் வழக்கை அடுத்த மாதம் 06 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தும் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர் படகுரிமை மீதான வழக்கும் அடுத்த மாதம் 08 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

# அத்தியாவசிய உணவுப்பொருட்கள் போதியளவு கையிருப்பில் உள்ளன



கொழும்பு, ஏப். 07

பண்டிகைக் காலத்திற்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருட்களின் கையிருப்பு தொடர்பில் இறக்குமதி யாளர்களுடன் தொடர்ச்சியாக கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் எம்.பி. அத்தப்பத்து தெரிவித்தார்.

பொருட்களை மறைத்து வைத்தல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்தல் உள்ளிட்ட நுகர்வோரை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் செயற்பாடுகளைக் குறைப்பதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபை மற்றும் அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் குழு, நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத் தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டுக்கு தேவையான உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொடுக்கு மாறு அனைத்து வங்கிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே, திரவ முட்டை இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதற்கான உரிய வரி நிவாரணம் வழங்கப்பட்டுள்ள தாக வர்த்தக அமைச்சின் செயலாளர் எம்.பி.அத்தப் பத்து தெரிவித்தார்.

பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் ஊடாக இவ்வாறு திரவ முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வும் அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் திரவ முட்டை களை பேக்கரி உற்பத்திகளுக்காக பயன்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(அ)

# மீண்டும் ஜனாதிபதியாக ரணில் வருவதே பெரமுனவின் விருப்பம்!

## கூறுகிறார் பஸில் ராஜபக்ஷ




கொழும்பு, ஏப். 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரவேண்டும்

என்பது மொட்டுக் கட்சியில் உள்ள பலரினதும் விருப்பம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதலில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வரட்டும். அதன்பின்னர் வேட்பாளர் தொடர்பில் பேசி இறுதி முடிவு எடுப்போம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என மொட்டுக் கட்சியில் பலர் யோசனை முன்வைத்துள்ளனர்.

எனினும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பில் மொட்டுக் கட்சி இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறும் என்று தெரியாது. எனவே, வேட்பாளர் தொடர்பில் நாம் இப்போது அவசரப்படக் கூடாது.

மொட்டுக் கட்சி களமிறக்கும் ஜனாதிபதி வேட்பாளர்தான் வெற்றியடைவார் என்பது உண்மை.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிறந்த தலைவர்.

அவர் மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பது மொட்டுக் கட்சியில் உள்ள பலரினதும் விருப்பம்.

எனினும், இது தொடர்பில் அவருடன் நாம் உத்தியோகபூர்வமாகப் பேசவில்லை. முதலில் தேர்தல் தொடர்பில் அறிவிப்பு வரட்டும். அதன் பின்னர் வேட்பாளர் தொடர்பில் பேசி இறுதி முடிவு எடுப்போம் - என்றார்.

(அ)

# கல்வி அமைச்சை சாடும் இலங்கை ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஏப். 07

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் இருந்து ஆசிரியர்கள் விலகவில்லை எனவும், மதிப்பீட்டுப் பணிகளுக்கான முதற்கட்ட நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொள்ளவில்லை என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அந்த சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது கல்விச் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தி பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது.

அவசியமான விடயங்களை அரசாங்கம் செய்தால் இவ்வாறான தேவையற்ற விடயங்களை செய்ய வேண்டிய நிலை இருக்காது.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் ஆசியர்கள் விலகவில்லை.விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்காக 20 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர்.

எனினும் இதுவரையில் அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை - என்றார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.